Registered in Ceylon as a Newspaper ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் யாழ்ப்பாணம் சுபகிருது வைகாசி 5 ஆம் நாள் துல்ஹஜ் 13 (18-5-62) வெள்ளிக்கிழமை இதழ் 96




பண்டாரநாயக்கா கொலைவழக்கு

# பிரிவிகவுன்சில் அப்பீல்

# தள்ளுபடி

## பழைய தண்டனை நிறைவேற்றப்படும்

லண்டன், மே 17

பண்டாரநாயக்கா கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட தல்துவ சோமராமவும், ஆயுட்காலச் சிறைத்தண்டனை பெற்ற மப்பிட்டிக்கம புத்தரகித்தா, எச். பி. ஜயவர்த்தன ஆகியோரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்துச் செய்த அப்பீல் மனுவை பிரிவிக்கவுன்சில் நேற்று தள்ளுபடி செய்தது. மப்பிட்டிகம புத்தரகித்தாவுக்கும் எச். பி. ஜயவர்த்தனவுக்கும் இலங்கை சுப்ரீம்கோர்ட் அளித்த மரணதண்டனையை இலங்கை அப்பீல் நீதி மன்றம் ஆயுட்கால சிறைத்தண்டனையாகக் குறைத்து வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து அரசாங்கம் தாக்கல்செய்திருந்த மனுவையும் பிரிவிகவுன்சில் தள்ளுபடி செய்தது.

இலங்கை நீதிமன்றம் அளித்த தண்டனையை எதிர்த்து மனுச்செய்ய மப்பிட்டிகம புத்தரகித்தா, தல்துவ சோமராமா, எச். பி. ஜயவர்த்தன ஆகியோர் கோரிய விசேஷ அனுமதியை பிரிவிக்கவுன்சில் நிராகரித்துவிட்டதாக கவுன்சிலின் தலைவர் டக்கர் பிரபு அறிவித்தார்.

இலங்கையின் முன்னாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் திகதி அவரது வாசஸ்தலத்தின் வராந்தாவில் நான்கு தடவைகள் கைத்துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார்.

தல்துவ சோமராமா கொலைசெய்ததாகவும் மப்பிட்டிகம புத்தரகித்தா, எச். பி. ஜயவர்த்தன ஆகியோர் கொலைக்கு உடந்தையாக இருந்ததாகவும் இலங்கை சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்புக் கூறப்பட்டு 1961-ம் ஆண்டு மேமாதத்தில் மூவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பை ஆட்சேபித்து எதிரிகள் மூவரும் இலங்கை கிரிமினல் அப்பீல் நீதிமன்றத்துக்கு மனுச் செய்தனர். மனுவை விசாரித்த அப்பீல்நீதிமன்றம் சோமராமாவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை ஊர்ஜிதம் செய்து தீர்ப்பளித்து மப்பிட்டிகம புத்தரகித்தா, எச். பி. ஜயவர்த்தன ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை ஆயுட்கால சிறைத்தண்டனையாகக் குறைத்தது. இலங்கை கிரிமினல் சட்டப்படி சதிக்குற்றத்துக்கு மரணதண்டனை விதிக்கமுடியாது என்று அப்பீல் நீதிமன்றம் தண்டனையைக் குறைத்ததற்குக் காரணம் காட்டியது.

அப்பீல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவிகவுன்சிலுக்கு மப்பிட்டிகம புத்தரகித்தா, தல்துவ சோமராம, எச். பி. ஜயவர்த்தன ஆகியோர் மனுச்செய்திருந்தனர். மப்பிட்டிகம புத்தரகித்தா, எச். பி. ஜயவர்த்தன ஆகியோரின் தண்டனையை அப்பீல் நீதிமன்றம் குறைத்ததை ஆட்சேபித்து அரசாங்க தரப்பில் பிரிவிக்கவுன்சிலுக்கு மனு தாக்கல்செய்யப்பட்டது.

இருபகுதியினரின் அப்பீல் மனுக்களையும் பிரிவிகவுன்சில் நிராகரித்துவிட்டது.

---

## இன்று 7-25-க்கு வெஸாக் ஆரம்பம்

கொழும்பு, வியாழன்

நாளை மாலை 7-25 க்கு இலங்கையைச் சுற்றியுள்ள துறைமுகங்களிலிருக்கும் சகல கப்பல்களிலிருந்தும், ஆலைகளிலிருந்தும் சங்கு ஒலிப்பதுடன் வெஸாக் ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து பௌத்தர்கள் மத நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

சமஸ்தலங்கா மகாஜன சேவ சங்கமயத் தொண்டர்கள் பல்வேறு பந்தல்களிலும் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் பொலிசாருக்கு உதவி புரிவார்கள். பிற்பாக்கெட் ஆசாமிகளும், இதர நோக்கங்களைக்கொண்டவர்களும் பந்தல்களுக்குமுன் கூடுவது வழக்கமான ஒரு சம்பவம் என்றும், சங்கக் காரியதரிசி திரு. ஸ்டான்லி பத்மபெருமா கூறினர்.

பம்பாயில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட ஒரு புத்தர் சிலை ஊர்வலமாகக் கொண்டுவரப்படும்.

---

## ரூ. 15000 செலவில் பொது நூல்நிலையம் அமைக்கப்படுகிறது

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பின் வடபகுதியைச் சேர்ந்த சித்தாண்டிக் கிராமத்தில் பதினையாயிரம், ரூபாய் செலவில் ஓர் பொது வாசிகசாலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் சித்தாண்டிக் கிராம முன்னேற்றச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

பத்தாயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுவரும் இப்பொது வாசிகசாலைக்கான கட்டிடத்திற்கு, ஐயாயிரம் ரூபாய் செலவில் தளபாடங்கள் செய்யப்பட்டுவருகின்றன.

சித்தாண்டிக் கிராமத்தின் மத்தியில் அமையும் இப்பொது வாசிகசாலைக்கு மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்கள் பல விலையுயர்ந்த இலக்கிய, இலக்கண நூல்களை அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளனர்.

இப்பொழுது நூல்நிலையம் சாதாரண பொதுமக்களுக்கு மட்டுமல்லாது, உயர்வகுப்பு மாணவர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும்பலவகையிலும் பயனுள்ளதாய் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## தமிழரசு வாலிப முன்னணி

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் செயற் கமிட்டிக் கூட்டம் இம்மாதம் 19 ம் திகதி நடைபெறவிருக்கிறது. அண்மையில் மன்னாரில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சி செயற் குழுக் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கும் முக்கிய விஷயங்கள்பற்றி இவர்கள் ஆலோசனை செய்யவிருக்கின்றனரெனத் தெரிகிறது.

ஜூன் 5 ம் திகதியை துக்க தினமாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் பற்றியும், மற்றும் எதிர்காலத் திட்டங்கள்பற்றியும் வாலிப முன்னணிக் கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிகிறது.

---

## 'சியாட்டோ' சபைக் கூட்டம்

பாங்கொக், மே 17

'சியாட்டோ' எனப்படும் தென்கிழக்காசியா பாதுகாப்பு ஒப்பந்த நாடுகளின் சபைக் கூட்டம் நேற்று இங்கு நடைபெற்றது. லாவோஸ் நிலைமை பற்றி சபை ஆராய்ந்தது. தாய்லந்துக்கு அமெரிக்கா துருப்புக்களை அனுப்பியிருப்பது சரியான செய்கையென்று சபை அங்கீகரித்தது.

---

புசல்லாவ, புதன்

புசல்லாவையில் உள்ள புனித திருத்துவக் கல்லூரியும், சி. சி. சிங்கள கலவன் பாடசாலையும் அரசாங்கம் பொறுப்பேற்றதை முன்னிட்டு இரு பாடசாலைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறது.

இப்பகுதியில் மொத்தம் 7 பாடசாலைகள் உள்ளன எனினும் மேற்படி இரண்டு பாடசாலைகள் மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளன.

---

## தோட்டத்தில் மாரியம்மன் திருவிழா

புசல்லாவ, புதன்

புசல்லாவையைச் சேர்ந்த மேட்டுப் புசல்லாவத் தோட்டத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழா உற்சவம் சிறப்பாக நடைபெற்றது

---

## பாதுகாப்புச் சபை 28-ந் திகதி மீண்டும் கூடும்

நியூயோர்க், மே 17

காஷ்மீர் பிரச்னையை இன்று விவாதிப்பதாகவிருந்த ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டம் இம்மாதம் 28-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை ஒத்திவைக்கவேண்டுமென்று இந்தியா கோரியிருந்தது.

---

## திருவள்ளுவர் திருநாள் அனுபந்தம்

இன்றைய 'ஈழநாடு' இதழுடன் திருவள்ளுவர் திருநாள் அனுபந்தமும் இணைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 12 பக்கங்களுக்கும் விலை சதம் 10.

---

## வவுனியாவில் பர்மா ஸ்தானிகர்

வவுனியா, புதன்

புதிதாகக் கட்டப்பட்ட வவுனியா கிழக்குமூலை மேற்கு சின்னச் செட்டிகுளம் கிராமசபை மண்டபத் திறப்புவிழா வவுனியா அரசாங்க அதிபர் திரு. எம். செனிவிரத்தின தலைமையில் நடைபெற்றது. கட்டிடத்தைத் திறந்துவைக்க பர்மா ஸ்தானிகர் திரு. ரிங்ஓங்கும் திருமதி ரிங்ஓங்கும் அழைக்கப்பட்டனர். குத்துவிளக்கேற்றி திருமதி ரிங்ஓங் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

தலைவர் திரு. செனிவிரத்தின வரவேற்புரை நிகழ்த்துகையில் இலங்கைக்கும் பர்மாவுக்கும் தொண்டுதொட்டு கலாச்சாரத் தொடர்பு இருந்து வந்ததாகவும் தொடர்புகள் இரு நாட்டின் நட்புறவை வளர்க்க ஏதுவாக இருக்கும் என்றும் கூறினர்.

அடுத்து பர்மா ஸ்தானிகர் திரு. ரிங்ஓங் பேசுகையில், "பர்மா நாட்டுக்கும் இலங்கை நாட்டுக்கும் கலாச்சாரத் தொடர்புகள் தொன்மைவாய்ந்தது. பர்மா மக்களின் உளப்பாங்குகள் இலங்கை சிங்கள-தமிழ் மக்களில் இருக்கின்றன" என்று கூறினர்.

---

## கொழும்பில் திருவள்ளுவர் நினைவு விழாவும் ஏட்டுச்சுவடி ஊர்வலமும்

கொழும்பு, வெள்ளி

வட கொழும்பு இந்து பரிபாலன சங்க ஆதரவில் திருவள்ளுவர் நினைவு விழா இம்மாதம் 20-ம் திகதி முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவிருக்கிறது.

ஏட்டுச்சுவடி ஊர்வல விழாவை சேர். அருணாசலம் மகாதேவா ஆரம்பித்துவைப்பார். இச்சங்கத்தின் தலைவர் திரு. வி. முத்துக் குமாரசாமி வரவேற்புரை நிகழ்த்துவார்.

உயர்தர நீதிமன்ற ஆணையாளர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் பல அறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றனர். விசேஷ பூசைகளும் இடம் பெறுகின்றன.

---

## இசை விழா

யாழ்ப்பாணம், வியாழன்

மீசாலை தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் வருகிற 25, 26, 27, 28-ம் திகதிகளில் மீசாலையில் இசைவிழா நடைபெறும்.

---

வவுனியா, புதன்

வவுனியாப் பட்டினசபை 4-ம் வட்டார இடைத்தேர்தலுக்கான அபேட்சை மனுப்பத்திரம் இன்று தாக்கல் செய்யப்பட்டது. திரு. பு. கருணாகரன், திரு. சி. தர்மலிங்கம் ஆகியோர் போட்டியிடுகின்றனர். தேர்தல் ஜூன் மாதம் 2 ம் திகதி நடைபெறும்.

# இன்று உங்கள் பலன்

–சோதிட ஆசான்செ. தெல்லியூர்–

சுபகிருது ஆண்டு வைகாசித் திங்கள் 5ம் நாள் வெள்ளிக் கிழமை (18-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1381, துல்ஹஜ்ஜு மாதம் 13ம் பிறை.

மாலை 7–58வரை சதுர்த்தசி. பின்னர் பூரணை மாலை 4-17 வரை சுவாதி. அதன் பின்னர் விசாகம். சித்தயோகம், நரசிங்க ஜயந்தி, இராகுகாலம் 10-23முதல்11-53வரை. வன்னி விளாங்குளம் முத்துமாரியம்மன் பொங்கல், சுதுமலை புவனேஸ்வரியம்மை தேர். பருளாய் முருகமூர்த்தி தேர்.

திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

## இராசிப்பலன்

**சுவாதி-விசாகம்:** நல்லோர் நட்பு, வர்த்தகச் சிறப்பு, மதிப்புயர்ச்சி, யோசனை, பிரயாணம்.

**மேடம்:** பிரயாணசுகம், வர்த்தக உயர்ச்சி, பொருள்வரவு, மதிப்புயர்ச்சி.

**இடபம்:** உழைப்பு நலம், ஆதாயம், பிரபுதரிசனம், கடன் பழு நீக்கம்.

**மிதுனம்:** வீண்செலவு, கடன்படல், ஏமாற்றம், கவலை.

**கடகம்:** சுபசெய்தி, சந்தோஷம், விவாக கொண்டாட்டம், விருந்து.

**சிங்கம்:** தருமச்செய்கை, பொதுசனமதிப்பு, பிரயாணம், செலவு.

**கன்னி:** சுபகருமவெற்றி, நற்செய்தி கேட்டல். மாதாவழி உதவி, கீர்த்தி.

**துலாம்:** குடும்ப கஷ்டம், அதைரியம், யோசனை, பகை வளர்ச்சி.

**விருச்சிகம்:** நல்லோர் நட்பு, வர்த்தகமேன்மை, மதிப்புயர்ச்சி, பணவசதி.

**தனு:** செலவு அதிகரித்தல், அலட்சியபுத்தி, செய்காரியக்கேடு, பொருள் நஷ்டம்.

**மகரம்:** புத்தி சாதுரியம், தொழில் மேன்மை, உறவினர் உதவி, செலவு.

**கும்பம்:** முயற்சிவெற்றி, தைரியம், கடும் உழைப்பு, பொருள் வரவு.

**மீனம்:** வண்டிவாகன சுகம், சந்தோஷம், பணவசதி, தெய்வவழிபாடு.

## நாளை

சுபகிருதுஆண்டு, வைகாசித் திங்கள் 6ம் நாள் சனிக்கிழமை(19-5-62)ஹிஜ்ரி ஆண்டு 1381, துல்ஹஜ்ஜு மாதம் 14ம் பிறை.

இன்று இரவு 8-36 வரை பூரணை. பின்னர் அபரபட்சபிரதமை மாலை 5-38வரை விசாகம், அதன் பின்னர் அனுஷம். சித்தயோகம். பூரணை விரதம். வைகாசிவிசாகம். அர்த்தநாரீசுவரவிரதம். இராகு காலம் 8-52முதல்10-22வரை.

நயமான்வார் குருபூசைத்திருநாள் நல்லூர் கந்தசுவாமி கோயில் வைகாசி விசாகம், ஆறுமுகசாமி ஸ்னபன அபிசேகம், நியாஸார்ச்சனை,மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகைஉற்சவம். தெல்லிப்பழை மாரியம்பாள் பொங்கல் உற்சவம், பருளாய் முருகமூர்த்தி திருவடி நிலை தீர்த்தோற்சவம்.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு மாலை 8-36வரையும், அனுஷம், கேட்டை, மூலம் பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இரவும் படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களைக் குறித்தகாலத்துள் மேற்கொள்ளலாகாது.

## இராசிப்பலன்

**விசாகம-அனுஷம்:** செலவு, தருமவழி யோசனை, கடன் வரவு, பெரியோர் மதிப்பு.

**மேடம்:** வாக்குவெற்றி, தொழில் நன்மை, விவகாரம், செலவு அதிகரித்தல்.

**இடபம்:** பகைவர் இடர், வித்தைச் சிறப்பு, வாக்கு வெற்றி குடும்பநலம்.

**மிதுனம்:** பெண் தொல்லை, தொழில் ஊக்கம், நல்லோர் உதவி, பணமுடை.

**கடகம்:** உழைப்பு பலிதம், மனத்தைரியம், பணவரவு, மதிப்பு.

**சிங்கம்:** பிரயாணம், மனக்கவலை, போசனகஷ்டம், பணச்செலவு.

**கன்னி:** பெண்களாற் கஷ்டம், பணமுடை, உழைப்புக் கடுமை, யோசனை.

**துலாம்:** வருமானத் தடை, பணக்கஷ்டம், வீண்செலவு, கடன்படல்.

**விருச்சிகம்:** தெய்வவழிபாடு, பெரியோர் ஆதரவு, மதிப்புயர்ச்சி, சந்தோஷ வாழ்வு.

**தனு:** நீசர் தொடர்பு,ஏமாற்றம், பணமுடை, கவலை.

**மகரம்:** பிதாவழி சிந்தனை, தருமச்செலவு, வாக்கு வன்மை, பணவரவு.

**கும்பம்:** குடும்ப கஷ்டம், நிம்மதியீனம், பணமுடை,தொழிற் கேடு.

**மீனம்:** தாயாதிகள் தொல்லை, பணமுடை, பிதாவழி உதவி, சந்தோஷம்.

# தேயிலைசாகுபடிக்கு உதவிப்பணம்

## அடுத்த ஆண்டு முதல் அதிகரிக்கும்

காலி, வியாழன்

தேயிலைச் சாகுபடிக்கு அடுத்த ஆண்டு முதல் உதவிப் பணத்தை அதிகரிப்பதெனஅரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1959-ம் ஆண்டு அரசாங்கம் வெளியிட்ட பத்தாண்டுத்திட்டத்தில், அடுத்த ஆண்டு 50000 ஏக்கர் தேயிலைச்சாகுபடி குறிக்கோளாய் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனல் இது வரை 2428 ஏக்கரிலேயே தேயிலைப் பயிர்செய்கை நடைபெற்றுள்ளது. தேயிலைப்புனர் நடுகைக்கு 5535 ஏக்கர்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாக ரப்பர், தென்னைப்பயிர்ச் செய்கை அதிகரித்திருக்கிறது.

---

## அம்பாள் ஆலய உற்சவம்

காங்கேசன்துறை, வியாழன்

காங்கேசன்துறை முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த விசாக உற்சவம் வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் நடைபெற விருக்கிறது.


# வரி விளம்பரம்

## காணி விற்பனைக்கு

காங்கேசன்துறை பட்டினசபை 5-ம் வட்டாரத்தில் இல. 445-ம், 447-ம் காங்கேசன் துறை—பருத்தித்துறை ரோட்டுக்கு வடக்கே காணி 107 பரப்பும் கல்வீடும்.

இது 25 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு 1962-ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 19-ந் திகதி (19-5-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். இதுகொழும்புகாலஞ்சென்ற டொளஸ். ஓபயசேகராவின் காணி.

மேலும் விபரம் அறியவிரும்புவோர் யாழ்பபாணம் முடிக்குரிய நியாயதுரந்தரர் திரு. சி. சி. சோமசேகரம் அவர்களிடம் அல்லது என்னிடம் அறிந்து கொள்ளலாம்.

சி. சங்கரப்பிள்ளை,
ஏல விற்பனையாளர்.

தெல்லிப்பழை,
12-4-1962.

## தேவை

யாழ்ப்பாணம் பீச் ரோட்டிலுள்ள P. W. D. கந்தோர் சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்குத் தகுதியான ஒருவர் உடன் தேவை. விபரத்திற்கு நேரில் மேற்கூறிய கந்தோரில் விசாரிக்கவும்.

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

எங்கள் சிரேஷ்ட புத்திரி செல்வி தவமலர்க்கும், அல்லைப்பிட்டி, திரு. ஆ. சிவகுரு அவர்கள் சிரேஷ்ட புத்திரன், செல்வன் செம்பொற்சோதிக்கும், 19-5-62 சனிக்கிழமை இரவு 12—1 மணி நிகழும் திருமண வைபவத்தில் சுற்றத்தார், நண்பர் அனைவருஞ் சமுகந்தந்து, மணமக்கட்கு நல்லாசி தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்ரேம்.

வணக்கம்.

இங்ஙனம்
க. சாந்தலிங்கமும்
பாரியாரும்.

"லிங்கல் ரான்"
25, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர்.
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# வழக்குத்தள்ளுபடி; எதிரி விடுதலை

தெல்லிப்பழை, புதன்

இலங்கை போக்குவரத்துச் சபை இன்ஸ்பெக்டர் திரு. வி. நடராசாவை சுதுமலையைச் சேர்ந்த செல்லையாவேதராஜா கையாலும் காலாலும் தாக்கிக் காயம் விளைவித்ததாகச் சுன்னகம் பெலிசாரல் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. நடராசா சாட்சியமளிக்கையில், தாவடிச் சந்தியில் தான் இறங்கி நிற்கையில் தன்னை ஒருவர் முதலில் அடித்தாரென்றும் உடனே தான் கீழே விழுந்ததாகவும் வேறுமூவரும் என்னை அடித்தாரென்றும் எதிரியை தான் காணவில்லை என்றும் கூறினர். நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்தார்.




# கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கு மீண்டும் பேச்சுவார்த்தை

## இடதுசாரி, வலதுசாரியினர் நிபந்தனையின்றி சம்மதம்

### தாய்லாந்தில் அமெரிக்க துருப்புக்கள் இறங்கின

வியன்டைன், மே 17

லாவோஸில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக வலதுசாரியினருடன் நிபந்தனை எதுவுமின்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இடதுசாரித் தலைவர்களும் நடுநிலைமைத் தலைவர்களும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இத்தகவலை லாலோஸுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் தலைவர் திரு. சிங் அறிவித்தார்.

லாவோஸில் இப்பொழுது சண்டை நின்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் இன்று அதிகாலையில் தரையிறங்கிய அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த 1800 துருப்புக்கள் தாய்லாந்து-லாவோஸ் எல்லைக்குச் சமீபத்தில் நிறுத்தப்படுவார்களென அறிவிக்கப்படுகிறது.

தாய்லாந்துக்கு அமெரிக்கா துருப்புக்களை அனுப்பியதற்கான காரணங்களை ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசியு தாண்ட்டுக்கு ஐ. நா. விலுள்ள அமெரிக்க நிரந்தரப்பிரதிநிதி திரு. அட்லாய் ஸ்டீவன்ஸன் கடிதம்மூலம் விளக்கியுள்ளார்.

தாய்லாந்தில் அமெரிக்கப் படைகளுக்குப் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள லெப்டினண்ட் ஜெனரல் ஜேம்ஸ் ரிச்சார்ட்சன்சைகோன் போய்ச் சேர்ந்துள்ளார்.

புதுடில்லியிலுள்ளசோவியத் தூதர் இந்திய காமன்வெல்த் உறவுக் காரியதரிசியைச் சந்தித்து லாவோஸ் நிலைமை பற்றிப்பேசினர்.

சில தினங்களுக்கு முன் இந்திய வெளிவிவகாரக் காரியதரிசியை பிரிட்டிஷ் ஸ்தானிகர் சந்தித்துப் பேசினர்.

தாய்லாந்துக்கு அமெரிக்கா படைகள் அனுப்பியுள்ளதை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'இஸ்வெஸ்டியா' வன்மையாகக் கண்டித்துள்ளது.

## பாஷையூர் சிறகுவலைக் கடற்கொள்ளை

### யாழ்ப்பாணம் எம். பி. மந்திரியை சந்திப்பார்

யாழ்ப்பாணம், வியாழன்

பாஷையூர் கடற்தொழிலாளரின் சிறகுவலைக்கடற் கொள்ளைபற்றித் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஏ.டி. துரையப்பாவை இத்தொழிலாளர்கள் பேட்டி கண்டனர். தொழிலாளர் குழுவினருக்கு யாழ். எம். பி. இது விஷயமாகக் கடற் தொழில் அமைச்சர் திரு. சி. பி. டி' சில்லவாவை இன்று பேட்டி கண்டு இத் தொழிலாளருக்கு கடந்த 30 வருட காலமாக ரூபா 8 லட்சத்துக்கு மகதிமாக நட்டத்தை இழைத்து வரும் இச் சிறகுவலை கொள்ளையைத் தடுக்க உடனடியாக யாழ். நகர் கடலிலே மாலை 6 மணி தொடக்கம் மறு நாட் காலை 6 மணிவரை யாழ். நகர் பொலிஸார் ரோந்து செய்ய அவர்களுக்கு ஓர் இயந்திரப் படகை கடற்தொழில் இலாகா மூலமோ, அன்றேல் பகிரங்க வேலைப் பகுதியினரிடம் உள்ள இயந்திரப்படகுகளில் ஒன்றைப்பெற்றோ அன்றேல் காரை நகரில் உள்ள கடற் படையினரிடம் இருந்தோ ஒரு இயந்திரப்படகைப் பெற்று யாழ். பொலிஸாருக்குக் கொடுத்து பாஷையூர் கடற் தொழிலாளரின் சிறகு வலைக் களவை உடன் தடுக்க நடவடிக்கை எடுக்கும் படி அமைச்சரிடம் வற்புறுத்தப் போவதாக உறுதி கூறியுள்ளார்.

## காஷ்மீரில் நேரு

ஸ்ரீநகர், மே 16

இன்று ஸ்ரீநகருக்கு வந்து சேர்ந்த பிரதமர் நேருவை காஷ்மீர் மன்னரும், பிரதம மந்திரியும், மந்திரிகளும், சட்டசபை உறுப்பினர்களும் வரவேற்றனர். மன்னரும் பிரதமரும் மாலை அவரை வரவேற்றனர். காஷ்மீரில் 10 நாள் ஓய்வு பெறுவதற்காக டில்லியிலிருந்து புறப்பட்ட திரு. நேருவை மந்திரிகள் வழியனுப்பி வைத்தனர். நேரு புறப்படுமுன் அவரைக் சோதித்த வைத்திய நிபுணர்கள் நேருவின் உடல் நிலை திருப்திகரமாய் இருந்து வருவதாக அறிவித்தனர்.

## முன்னைநாள் உப்புக் கமிஷனர் இளைப்பாறியுள்ளார்

கொழும்பு, புதன்

முன்னை நாள் உப்புக்கமிஷனரும் உப்புக்கார்ப்பரேஷனின் தலைவருமான திரு. ஈ. பி. திசவீரசிங்க சிவில் சேவையிலிருந்து கடந்த திங்கட்கிழமையன்று இளைப்பாறினர்.

கடந்த ஆண்டு டிசம்பரிலிருந்தே அரசாங்க சேவையை விட்டு விலக திரு. திசவீரசிங்கா அரசாங்கத்தின் அனுமதியைக் கோரியிருந்தார் பி. ஓ. பெர்னண்டோவின் தலைமையில் உப்புக்கமிஷன் கூடும் வரை இவரை அரசாங்கம் பதவியில் வைத்திருந்தது.

## அணு ஆயுத சோதனைகளை ரஷ்யா மீண்டும் ஆரம்பிக்கும்

### குருஷ்சேவ் அறிவிப்பு

லண்டன், மே 17

அணு ஆயுத சோதனைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களை சோவியத் யூனியன் செய்துவருகிறது என்று சோவியத் பிரதமர் குருஷ்சேவ் நேற்றுப் பல்கேரியாவில் ஒரு வைபவத்தில் பேசுகையில் அறிவித்தார்.

சோவியத் மக்களின் ஆட்சேபனையையும் பொருட்படுத்தாமல அமெரிக்கர்கள் அணு ஆயுத பரீட்சைகளைத் தொடர்ந்து நடத்திவருகின்றனர். சோவியத்யூனியனும் தன்னைத் தானே தயார்செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும்" என்று திரு குருஷ்சேவ் தெரிவித்தார்.

## ரூ. 75 அபராதம்

காங்கேசன்துறை, புதன்

ஏழாலையைச் சேர்ந்த எஸ். நடராசா என்பவர் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட ஒன்றரைப் போத்தல் வடிசாராயம் வைத்திருந்ததாகச் சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ் சாட்டி மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதிபதி எதிரியை 75 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

## வெட்டிடுக்கிளிகூட்டம்

புதுடில்லி, மே 17

மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வெட்டுக்கிளிக் கூட்டமொன்று ராஜஸ்தானுக்குள் பிரவேசித்து பயிர்களை நாசம் செய்வதாக அறிவிக்கப்படுகிறது. இந்த வெட்டுக்கிளிக் கூட்டம் ஆறுமைல் நீளம் இரண்டு மைல் அகலமும் உள்ளது.

---

## மலேசிய சம்மேளனம்

லண்டன், மே 17

மலேசியா சம்மேளனம் அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் உருவாகிவிடுமென்று சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்லீ தெரிவித்தார். மலேசிய சம்மேளனம்பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தசிங்கப்பூர் பிரதமர் இங்கு வந்துள்ளார்.

## ரஷ்யாவில் இலங்கை பாராளுமன்ற தூதுகோஷ்டி

### பல நகரங்களுக்கும் விஜயம் செய்தது.

அல்மா-அடா, மே 14

ரஷ்யா சென்றிருக்கும் இலங்கை பாராளுமன்றத் தூதுக் கோஷ்டி கஸாக்கிஸ்தான் குடியரசில் தன் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு மாஸ்கோ திரும்பியது. உலகின் மிகப் பசுமையான இடங்களில் ஒன்று என மதிக்கப்படும் கஸாக்கிஸ்தான் தலைநகரில் முக்கிய இடங்களை அவர்கள் பார்வையிட்டனர்.

அல்மா-அடா நகரில் தங்களுக்குச் சிறந்த வரவேற்புக் கிடைத்ததாயும், தலைநகரில் ராஜதந்திரிகள், விஞ்ஞானிகள், ஆலைத் தொழிலாளர்கள் ஆகியோரை தாங்கள் சந்தித்ததில் பயனடைந்ததாயும் தூதுகோஷ்டியில் ஒருவரான ரெஜினல்ட் பெரேரா கூறினர். "40 வருடங்களில் கஸாக்கிஸ்தான் அடைந்த முன்னேற்றம் எங்களுக்கு ஒரு அற்புதமாகத் தோன்றுகிறது. சோஸலிசத்தினல்தான் இந்த அதிசயத்தைச் சாதிக்கமுடியும். கஸாக்கிஸ்தான் உட்பட சோவியத் மக்கள் யுத்தத்தை விரும்புகிறார்கள் என்பது தவறு. ஆக்கவேலையில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்" என்றும் திரு. பெரேரா கூறினர்.

சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல தலைமையில் சென்றுள்ள இலங்கை பாராளுமன்றத் தூதுகோஷ்டி சோவியத் யூனியனில் மூன்று வாரம் சுற்றுப்பிரயாணம் செய்தது. லெனின்கிராட், வொல்கோகிராட், கார்கோவ், வடகாகஸஸிலுள்ள நகரங்கள் ஆகியவற்றுக்குத் தூதுகோஷ்டி விஜயம் செய்தது.

---

## மாதர்கட்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்

காராச்சி, மே. 17

பாக்கிஸ்தான் தேசிய சபைக்கும் மாகாண சபைகளுக்கும் மாதர்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகுதிகளுக்கான தேர்தல் அபேட்சை மனுக்கள் இன்று தாக்கல் செய்யப்படுகின்றன. மாகாண சபைகளுக்கான தேர்தல் 27-ந் திகதியும் தேசிய சபைக்கான தேர்தல் 29-ந் திகதியும் நடைபெறும்.

---

பிரான்சில்

## 5 மந்திரிகள் ராஜினமா

பாரிஸ், மே. 17

பிரஞ்சு மந்திரி சபையிலுள்ள கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஐந்து மந்திரிகள் ராஜினமாச் செய்துவிட்டனர்.

பிரஞ்சு ஜனதிபதி டிகோலின் ஐரோப்பியக் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாதென்று காரணம் தெரிவித்து அவர்கள் ராஜினமாச் செய்தனர்.

மந்திரிசபை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

---

பாரிஸ், மே 17

அல்ஜீரிய சுயநிர்ணய உரிமையைத் தீர்மானிப்பதற்கான ஜனவாக்குக் கணிப்பு ஜூலை முதல் திகதியில் நடைபெறும்.

## விமான விபத்தில் நால்வர் பலி

கெய்ரோ, மே 15

கெய்ரோ சென்றுகொண்டிருந்த ஐக்கிய அரபு விமானக் கப்பல் ஒன்று பறந்துகொண்டிருந்த சமயத்திலேயே வெடித்துப் பறந்ததால் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த நால்வர் மரணமானர்கள். கெய்ரோ விமானநிலையத்துக்குச் சமீபத்தில் விமானத்தின் பகுதிகள் பறந்து சிதறின.

## அல்ஜீரிய கொலைகளுக்கு தாமே காரணம் என்கிறார் சலான்

பாரிஸ், மே 17

அல்ஜீரியாவில் இரகசிய ராணுவ ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளுக்குத் தாமே முழுப்பொறுப்பு என்று முன்னாள் பிரஞ்சு ஜெனரலான சலான் நேற்று ராணுவநீதிமன்றத்தின் முன ஒப்புக்கொண்டார்.

"நான் ஒரு கொள்ளைக்கூட்டத்தின் தலைவனல்ல, வெற்றிப்படையின் தலைவன்" என்று ஜெனரல் சலான் கூறினர்.

"அல்ஜீரியா பிரான்ஸின் ஒரு பகுதியாக இருக்குமென்று ஜெனரல் டிகோல் எனக்கு உறுதியளித்திருந்தார். பின்னர் அல்ஜீரியாவுக்கு சுதந்திரம் வழங்கப்படும் எனத் தெரிவித்து அவர் என்னை ஏமாற்றிவிட்டார்" என்று ஜெனரல் சலான் கூறினர்.

## இடைத்தேர்தல் முடிவு

உடுப்பிட்டி, புதன்

வதிரி வடக்கு மிஷன் பாடசாலையை அரசாங்கம் எடுத்ததன் விளைவாக 22-ம் வட்டார அங்கத்தவரான திரு. கே. கிருஷ்ணபிள்ளையின் இராஜிநாமாவின் காரணமாக 22-ம் வட்டார அங்கத்தவராக சமசமாஜக்கட்சி அனுதாபியான திரு. வி. மகாலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


★ "டல்மியா" சிமேந்து BSS 12/1958 பிரமாணத்துக்கேற்ற வகையில் செய்யப்பட்டது.

★ " பைப்புக்கள், பைப்பு உபகரணங்கள்.

★ " நெருப்பினல் பாதிக்கப்படாத செங்கல்.

★ " நெருப்பினல் பாதிக்கப்படாத களிமண்

ஆகியவை எம்மிடமுண்டு.

விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

**செட்டிநாடு கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிட்டட்**

116, 118. கெயிஸர் வீதி, கொழும்பு

## அறிவித்தல்

விசாக் தினத்தை முன்னிட்டு 'ஈழநாடு' காரியாலயத்துக்கு இன்றுவெள்ளிக்கிழமை விடுமுறையாதலால்(நாளை)சனிக் கிழமை (19-5-62)மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணி வாக்கு

தூய அறிவு வடிவினாகிய இறைவனது நல்ல திருவடிகளை வணங்காமற் போனால் மனிதனாய்ப் பிறந்து கல்வியறிவு பெற்றதனால் யாதொரு பயனுமில்லை.

— திருவள்ளுவர்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு வைகாசி மீ 5 உ (18-5-62)

## விசாகச் செய்தி

"கருணை மூர்த்தியான புத்தர் பெருமானின் உபதேசங்கள் இன்று நமக்கு மிகவும் பயனளிக்கக்கூடியவை. வானவெளி ஆராய்ச்சியிலே இன்று நம்மை நாம் இழந்துவிட்டோம். அதைவிட முக்கியமானது, நம் இதயாகாசத்திலே உள்ள வெளியைப்பற்றி கவனம் செலுத்தவேண்டியதேயாகும். மேலான சமுதாயத்தை அமைக்க நமது நெஞ்சை பரிசுத்தப்படுத்த வேண்டியது மிக அவசியமென்று புத்தர் பெருமான் வற்புறுத்தினார்."

என்று இவ்வாறு ஓர் அருமையான விசேஷச் செய்தியை பாரத நாட்டின் புதிய ராஷ்டிரபதியான டாக்டர் ராதாகிருஷ்ணன், விசாக் பெருநாளை முன்னிட்டு இலங்கைக்கு அனுப்பியிருக்கிறார். இதில் குறிப்பிட்டபடி புத்தர் பெருமான் கூறியுள்ள வழியில் நாம் நடப்பதாயின் இலங்கையிலே எமைவருத்தும் இன்னல்களை நீக்குவதுடன் மட்டுமன்றி உலக சமாதானத்தை நிலைநாட்டவும் வெகுதூரம் உதவலாம்.

நம் இலங்கையிலே பெரும்பாலோர் பௌத்தர்கள். புத்தர் பெருமான் உபதேசித்த கருணை, மதுவிலக்கு, சத்தியம், தியாகம் முதலிய விரதங்களை கைக்கொண்டு அவ்விதமே வாழ்க்கையை நடத்தவேண்டியவர்கள். அந்த விரதங்களின்படி வாழ்க்கையை நடத்துவதாயின், இன்றுள்ள அரசியல், மொழி, வறுமை, சுரண்டல் முதலிய பிரச்னைகள் இங்கு வெகுவாக ஏற்பட்டிரா. மற்ற சமயத்தவர்களுக்கும் இது அப்படியே பொருந்தும்.

புத்தர் பெருமான் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியவரல்லர். அவரும் அவரது உபதேசங்களும் மக்கள் அனைவருக்கும் பொதுவுடமையாகும். சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் புதுப்பிக்கப்பட்ட புத்த விகாரை திறப்புவிழா நிகழ்ச்சிகளனைத்தும் தனிச் சிங்களத்திலேயே நடைபெற்றனவாம். தமிழ் பேசும் மக்களே அதிகமுள்ள இப்பகுதியில் இந்நிகழ்ச்சிகள் தமிழிலும் நடைபெறாதது வருந்தத்தக்கது. இதற்கு யார் பொறுப்பாயினும் சரி, இனி இவ்வித தவறுகள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மதுவிலக்கை பஞ்சசீலங்களில் ஒன்றாக வற்புறுத்தினார் புத்தர் பெருமான். ஆனால் இங்கு நாளுக்கு நாள் மதுபானம் அதிகரித்து, குற்றங்களும் பெருகிவருகின்றன. அழகான பல குடும்பங்கள் சிதைகின்றன. பலரது வாழ்க்கை குட்டிச்சுவராகின்றது. இந்தியாவிலே சென்னை உள்ளிட்டுப் பல ராஜ்யங்களில் மதுவிலக்கு அமுல் நடந்துவருகின்றது. பௌத்தர்கள் அதிகமுள்ள இலங்கையிலே, அரசாங்கம் மதுவிலக்குக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவர இன்னும் ஏன் தயங்கவேண்டும்?

ஆத்ம சோதனை செய்து நெஞ்சை பரிசுத்தமாக்கி, மற்றவர்களிடம் கருணை காட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார் புத்தர் பெருமான். புனிதமான இந்த விசாகதினத்திலே, சிறப்பாக இன்று ஆட்சி நடத்தும் பௌத்தர்கள் தங்கள் மனதைச் சோதித்து, மொழி முதலிய விஷயமாக, சிறுபான்மை மக்களுக்குச் செய்துவிட்ட தீங்கை உணர்ந்து மனம் மாறுவதாயின், நாட்டில் சமூகஅமைதி ஏற்பட்டு, நாடும் முன்னேறும். அவ்வித நல்லறிவும் மனமாற்றமும் ஏற்பட இப்பெருநாள் பயன்பட வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

இன்று விசாக தினம்

# பெருமை மிக்க புத்தர் கால வரலாறு

## மகான்களும் பெரியார்களும் தோன்றிய 6-ம் நூற்றாண்டு

— வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் —

புத்தபிரான் வாழ்ந்த கி. மு. ஆறாம் நூற்றாண்டு உலக வரலாற்றிலேயே முக்கியத்துவம் உடையது. சீனா தொடக்கம் கிரீஸ் ஈறாகவுள்ள பல நாடுகளிலும் இக்காலத்தில் பல பெரியார் தோன்றினர். சீனாவில் கொன்பியூஷியஸ், லாவோ திசு என்னும் பெரியார்களும் இந்தியாவில் மகாவீர், புத்தர் போன்ற மகான்களும், சேரமியா, எசக்கியேல் இசையா என்னும் தீர்க்கதரிசிகள் யூதேயாவிலும் தோன்றினார்கள். இக்காலத்திலே நபுக்கொதனசார் பபிலோனியாவையும், சைறஸ் பாரசீகத்தையும் ஆட்சி செய்தனர். இக்காலத்திலே அறிவியலின் தந்தை எனப்படும் தாலசும், க்ரேக்க மறையைச் சீர்திருத்தியவரும், அறிவியல் வல்லுநருமான பித்தகோறஸ் என்பாரும் வாழ்ந்தனர்.

இக்காலத்தில் வடஇந்தியாவில் பல அரசுகள் விளங்கியிருந்தன. தட்சசீலம் அல்லது தக்சிலாவைத் தலை நகராகக் கொண்ட காந்தாரம், கோசலம், மகதம், வடமதுரை, வரநாசி ஆகிய அரசுகளும்; மள்ளா, விதேகா, விச்சாவி, வச்சி, மத்சய ஆகிய குடியரசுகளும் திகழ்ந்தன.

தக்சசீலம், வரநாசி ஆகிய இடங்களில் சிறந்த கல்விக் கழகங்கள் இருந்தன. சங்கத இலக்கணிகரான பாணினியும், இந்திய மருத்துவ நூல் மன்னரான தனவந்திரி, சுசுறுத ஆகியோரும் தக்சசில பல்கலைக் கழகத்தில் உறைந்தனர். புத்தரது மருத்துவரான சீவக இப்பல்கலைக் கழகத்தில் மருத்துவமும் சத்திர சிகிச்சையும் ஏழாண்டுகள் பயின்றார்.

இருக்கு வேதப் பாக்கள் பிராக்மணம் எனப்படும் வழிபாட்டு முறைகள் மறைபற்றிய அறிவியற் கருத்துகள் பொதிந்த உபநிடதங்கள், இராமாயண, பாரத வரலாறுகள், இன்னோரன்ன நன்னூல்கள் இந்திய நாடெங்கும் பரவி ஒரு பொதுவான . பண்பாட்டை வளர்த்து வந்தன.

புத்தர் கி. மு. 563 இல் அல்லது கி. மு. 567 இல் பனிமலையின் அடிவாரத்திலுள்ள நேபாளம் என இப்போது வழங்கப்படுவதும், கபிலவஸ்து என அப்போது அறியப்பட்டதுமான இடத்தில் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் சுத்தோதனர்; அன்னையின் பெயர் மாயாதேவி. இவர் சாக்கியர் என்ற இனப்பிரிவில் கௌதம குடியைச் சேர்ந்தவர். இவரின் பெற்றோர் 'இலட்சியத்தில் வெற்றி கொண்டவர்' என்னும் பொருள்படும் சித்தார்த்தர் என்னும் பெயரை இவருக்கு அளித்தனர்.

இவரின் அன்னையார் கபிலவஸ்துவிலிருந்து தம் தந்தையாரின் நாடான தேவகாவுக்குப் போகும் வழியில் லும்பினி என்னும் பொழிலில் இவரை ஈன்றெடுத்தார். இவர் பிறப்புடன் தாயார் மரணம் அடைந்தார். 400 ஆண்டுகளுக்குப் பின் இவ்விடத்தை நினைவூட்ட அசோக மன்னன் ஒரு தூண் கட்டி எழுப்பியுள்ளான்.

அரசிளங்குமாரன் சித்தார்த்தர், தந்தையாரின் அன்பான அரவணைப்பில் அரண்மனையின் இன்பங்களை நுகர்ந்து வளர்பிறையென வளர்ந்து வந்தார். அரச குமாரர்கட்குரிய வில்வித்தை முதலாங் கலைகள் முறையே பயிற்றப்பட்டார். தமது நெருங்கிய உறவினருள் ஒருத்தியாகிய யசோதரை என்னும் இளவரசியை மணந்து, ராகுல என்னும் புதல்வனின் தந்தையுமானார்.

அவருடைய வாழ்வு அவருக்கு இன்பம் அளித்த போதிலும் வாழ்க்கைக்கு இடும்பைகளாய் விளங்கும் துன்பங்கள், நோவுகள், வறுமை, இறப்பு முதலியன அவர் உள்ளத்தைக் கலக்கின. ஒருநாள் நகரத்தின் வழியாற்சென்றவர், ஒன்றன் பின்னொன்றாய் மூன்று துன்ப நிகழ்ச்சிகளைககண்டார். உடல் மெலிந்து எலும்புந் தோலுமான ஒரு முதியவர் நடக்கக்கூட வலியற்றவராய்த் தடியொன்றை ஊன்றிக்கொண்டு தட்டித் தடுமாறி நடப்பதை இவர்கண்டார்; நோயின் நோவைத் தாங்க முடியாமல் அரற்றிக் கொண்டிருந்த ஒரு நோயாளியையும் கண்டார்; ஒரு பிணத்தை இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் காட்சியையும் கண்டார். இத்துணைத் துன்பங்கள் ஏன் நிகழ்கின்றன என்னும் சிந்தனையில் ஆழ்ந்தார். இதனைச் சிந்தித்துக் கொண்டு செல்லும் போது, மறைந்த உண்மையை அறிய முயலும் ஒரு துறவியும் அவர் கண் எதிர்பட்டார்.

அரண்மனைக்கு மீண்ட இளவரசன் எல்லாவித இன்பங்களையுந் துறந்து ஆராய்ச்சியில் ஈடுபட முடிவுசெய்தார். இந்த மனிதப்பிரச்சினைக்கு விடை காண அக்காலத்தில் விளங்கிய சிறந்த ஆசிரியர்களைக் காண முடிவு செய்தார்.

அரண்மனையின் பள்ளியறையில் நறுமணம் ஊட்டப்பட்ட நெய் விளக்கொன்று எரிகின்றது; படுக்கை மல்லிகை முதலிய மலர்கள் தூவப்பட்டு அழகாக விளங்குகின்றது; யாசோதரை மகன் ராகுலனை அணைத்துக்கொண்டு நித்திரை செய்கிறாள். இக் காட்சியைச் சித்தார்த்தர் பள்ளியறை வாயிலில் நின்று பார்த்துப் பருகுகிறார்; உள்ளம் ஊசலாடுகிறது; மனைவியைப் பற்றிய எண்ணமும், மகனைப்பற்றிய எண்ணமும் அவரை வாட்டுகின்றன. மனைவியோ, மகனோ விழித்துக் கொண்டார்களானால் தமது வழிக்கு இடஞ்சலாகுமென எண்ணி அரண்மனையிலிருந்து புறப்படலானார்.

அப்பொழுது வயது இருபத்தொன்பது நிரம்பிய சித்தார்த்தர் சிறந்த அறிஞர்களாகப் போற்றப்பட்ட ஆசிரியர்கள் சிலரையண்டினார். அவார கலாம உத்தம முதலானவர்கள் அறிவியல், யோகம், தியானம் முதலியவற்றில் சிறந்தவர்களாகக் கருதப்பட்டனர். இவர்களின் அறிவுரைப்படி உண்மையுள்ள மாணவர் ஐவருடன் உருவெல என்ற காட்டில் தனிமையான ஓரிடத்தில் ஆறு ஆண்டுகள் கடுமையான நோன்புகள் நோற்றும் உள்ளத்தை ஒடுக்கியும் தம்மை வருத்திக் கொண்டார். உடல் மெலிந்து உருக்குலைந்து உயிர் இறக்கும் நிலையிலிருந்தது. ஆனால் சித்தார்த்தரின் புதிருக்கு விடை கிட்டவில்லை. உறுதியான உடலும் உள்ளமும் வாழ்வு, இயற்கை, மனிதன் என்பவற்றின் மறைப் பொருட்களைத் தெரிந்து கொள்ளக்கூடிய சிறந்த கருவிகள் எனத் துணிந்து தமது நோன்பைக் குறைத்து நடு வழியைப் பின்பற்றினார். அவர் மாணவர் அவரை விட்டகன்றனர்.

சித்தார்த்தரோ விடாப்பிடியைக் கடைப்பிடித்து தமது ஆராய்வை மேலும் ஆறாண்டுகள் நிகழ்த்தினார். பலவித சந்தேகங்களும், சோதனைகளும் அவருக்குண்டாயின. இந்த ஆராய்வை விடுத்து மறுபடியும் இன்ப நுகர்வுகளில் ஈடுபட உள்ளந் தூண்டியது. இவற்றை 'மாரா' (பேயின்) வின் சோதனைகள் எனப் பௌத்த நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் சித்தார்த்தர் நிலைகுலையாது உறுதியாகத் தமது ஆராய்வில் ஈடுபட்டார்.

இறுதியாக அவர் வெள்ளரச மர நிழலில் இருந்து ஏழு வாரங்கள் ஆழ்ந்த தியானம் செய்தார். அவருடைய உள்ளத்தில் ஒரு புது ஒளி தோன்றியது. தமது பிரச்சினைகளுக்கு விடை கண்டார். போதி - அறிவொளி - புத்த நிலைமை அடைந்தார்.

'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' எனத் தாம் பெற்ற அறிவொளியையும் உண்மையையும் உலகத்தாரோடு கலந்து கொள்ளப் புத்தர் விரும்பினார். அவர் வரநாசிக்குச் சென்றபோது, அவருடைய பழைய மாணவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். வரநாசிக்கு அண்மையில் சாரநாத் எனப்பட்ட மான் பொழிலில் புத்தர் தமது முதற் பேருரையை நிகழ்த்தினார்.

## ஐயாறன் எழுதுவது

நேற்றுக்காலைநல்லூரிலிருந்து ஒரு முருகன் அடியார் வந்தார். வைகாசி விசாகத்தை முன்னிட்டு இன்று இரவு 8-30 மணிக்கு நல்லூரிலிருந்து செல்வச்சந்நிதிக்கு, முருகனின் திருவுருவப் படத்துடனும், காவடியுடனும் அடியார்களின் நாம பஜனை கால் நடையாகச் செல்ல ஏற்பாடாகியுள்ளதாம். அன்பர்கள் பஜனைக் கோஷ்டியாக வந்து ஆறுமுகப் பெருமான் அவதரித்த தினமாகிய இன்று அப்பெருமானது நாம பஜனையில் கலந்து 'நித்திரை விழித்து நற்பயனடைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இவ்விதம் நல்லூரிலிருந்து விசாகத்தன்று, பலமைல் தூரமுள்ள செல்வச்சந்நிதிக்கு நடந்து பஜனைசெய்துகொண்டு செல்ல ஒழுங்கு செய்துள்ளது இதுவே முதல்தடவை. மொழிச் சட்டம் வந்தபிறகு தமிழர்களிடையே தெய்வபக்தி அதிகம் வளர்ந்து வருவதற்கு இதுவும் ஓர் அடையாளமாகும்!

* * *

வைகாசி விசாகத்தன்று விசாகப் பெருமான் மட்டுமன்றி, புத்தரும் அவதரித்திருக்கிறார். புத்தரை மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களில் ஒருவராகக் கூறுவதுண்டு. முருகனே மகாவிஷ்ணுவின் மருமகனென்று புராணங்கள் கூறும். இதிலிருந்து புத்தருக்கும் முருகனுக்குமுள்ள நெருங்கிய உறவு தெளிவாகிறது.

* * *

புத்தர் அவதரித்த பாரத நாட்டிலே இன்று பௌத்த சமயம் வெகுவாக இல்லை. ஆனால் இலங்கையிலும் கிழக்காசியாவில் பல நாடுகளிலும் பௌத்தம் பரவலாகவுள்ளதைப் பார்க்கின்றோம். ஏன் இப்படி? பௌத்தசமயம் இந்தியாவில் எப்படி மறைந்தது? என்று ஒரு பிரமுகரைக் கேட்டேன். பரதநாட்டியம்தான் இதற்குக் காரணமென்றும், இந்து கோவில்களில் பரத நாட்டியத்தைப் புகுத்தியதால், பௌத்தர்களெல்லாம், அதைப் பார்க்க அக்கோவில்களுக்கு வந்து சைவர்களாக மாறிவிட்டதாகவும் அவர் கூறினர்! இந்த விளக்கம் எனக்குத் திருப்தியைத் தரவில்லை. தென்னாட்டுக் கோவில்களில் தான் பரதநாட்டியமிருந்தது. வட நாட்டிலும் பௌத்தம் மறைந்து இந்துசமயம் ஏற்படுவானேன்?

* * *

இதுபற்றி டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லதோர் விளக்கம் தந்துள்ளார். "புத்தர் இந்துவாகப் பிறந்து, இந்துவாக வாழ்ந்து, இந்துவாகவே மறைந்தவர். ஆகவே அவர் இந்துதான். இந்துசமயத்தில் சில முக்கிய சீர்திருத்தங்களைத்தான் புத்தர்பெருமான் செய்தார். ஆகவே இந்துமதம் வேறு பௌத்த மதம் வேறல்ல" என்றார். பின்னர் மதவேற்றுமைகளும் மதமாற்றங்களும் ஏற்படவே சங்கராச்சாரியார் அவதரித்து புத்தர் பெருமானை தசாதாவரங்களில் ஒன்றாக்கியதுடன், அவர் போதனைகளிலே முக்கியமானவற்றை இந்துசமயத்தில் சேர்த்துக் கொண்டுவிட்டார். ஆகவே இந்தியாவிலே பௌத்தம்ஒழியவில்லை. இந்து சமயத்துக்குள் மறைந்து இரண்டறக் கலந்துவிட்டது

(5-ம் பக்கம் பார்க்க)

புத்தர் இவ்விடத்தில் துறவிகள் ஆச்சிரமம் ஒன்றை நிறுவி வாழ்ந்து வந்தார். சலவைக் கல்லாலான ஒருதூணும் உச்சியில் மூன்று சிங்கங்களைக் கொண்ட சிற்பமும் அசோகனால் இங்கு நிறுவப்பட்டன. உச்சி வடிவம் சுதந்திர இந்தியாவின் தேசியச் சின்னமாகத் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

# வேலணையில்10-வது

## திருக்குறள் மகாநாடு

### இன்று ஆரம்பமாகிறது

யாழ்பாணம், வெள்ளி

தமிழ் மறைக் கழகத்தின் 10-வது திருக்குறள் மகாநாடு வேலணை வாலிபர் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் வேலணை அம்மன்கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள தொல்காப்பபியர் அரங்கில் ஆரம்பமாகிறது. இம்மாதம் 18, 19, 20-ந் திகதிகளில் இம் மகாநாடு தொடர்ந்து நடைபெறும். நிகழ்ச்சி விபரம் வருமாறு:-

**18-5-62**

தலைவர்: பண்டிதர் கா. பொ. இரத்தினம். பி. ப. 3-00 மணிக்கு திருக்குறள் ஏட்டுச் சுவடி ஊர்வலம். திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் தமிழ்மறைக்கழகக் காரியாலயத்திலிருந்து புறப்பட்டு வேலணை - புங்குடுதீவு வீதி வழியாகச் சென்று அம்மன் கோயில் வீதியிலுள்ள தொல்காப்பியர் அரங்கை அடையும். கடவுள் வாழ்த்து: வேலணை மத்திய கல்லூரி மாணவிகள் வரவேற்பு: ஆசிரியர் திரு. எ. நல்லையா. தொடக்கவுரை: பேராசிரியர் அ. சின்னத்தம்பி. பரிசில் வழங்குதல்: திரு. எம். திருச்செல்வம், கியூ. சி. விரிவுரைகள்: "வள்ளுவருக்கு வணக்கம்" பேராசிரியை திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன் "வள்ளுவர் வாய்மொழி" பண்டிதர் அ. பொன்னுத்துரை. "வாழ்வளிக்குங் குறள்" திரு. கு.வி. செல்லத்துரை. "ஒரே ஒரு குறள்" பேராசிரியர் சாலை இளந்திரையன். "வள்ளுவரும் கம்பரும்" வித்துவான் ஐயன் பெருமான் கோனர். நடனம்: கலாமணி குழுவினர். இசை விருந்து சங்கீதபூஷணம் பே. சந்திரசேகரம்.

**19-5-62**

மு. ப. 9-00

தலைவர்: முதலியார் செ. சின்னத்தம்பி.

**கருத்தரங்கம்**

பொருள்: வள்ளுவர் வழியில் வாழ்வினை உயர்த்துவது அறிவுடமையா? பொருளுடைமையா?

**அறிவுடமை**

திரு. இராஜ. அரியரத்தினம், வித்துவான் இ. சி. சோதிநாதன், ஆசிரியர் பொ. ஜெகநாதன், திரு. கனகசெந்திநாதன், திரு.ஈழவேந்தன், பேராசிரியை, கனகசவுந்தரி இளந்திரையன்.

**பொருளுடமை**

பேராசிரியர் திரு. ஐயன் பெருமான் கோனர், திரு. நா. ஞானசம்பந்தன், திரு. க. பே. முத்தையா, திரு. இ. மகாதேவா, திரு. நாவேந்தன், திரு. மு. கணபதிப்பிள்ளை. விரிவுரை: திரு. செ. இராசதுரை. எம். பி.

**மாலை நிகழ்ச்சிகள்**

பி. ப. 5-00

தலைவர்: திரு. வே. அ. கந்தையா எம். பி. "குறள்வழி வாழ்வு" திரு. ஆ. கந்தையா. "வள்ளுவர் வளர்த்தபெண்" பேராசிரியை கனகசவுந்தரி இளந்திரையன். "குறளும் காவியங்களும்" வித்துவான் க. கி. நடராசன். "இலக்கிய உலகில் இளங்கோவும் வள்ளுவரும்" வித்துவான் க. வேந்தனர். "வள்ளுவர் வகுத்த இல்லறம்" செல்வி புஷ்பா செல்வநாயகம். "தமிழ் மறை" பேராசிரியர் திரு. ஐயன் பெருமான் கோனர். "பல்கலைப் புலவன் வள்ளுவனர்' திரு. சபா-ஆனந்தர். நடனம்: நடன ஆசிரியர் நல்லையாவின் மாணவிகள். இசை விருந்து: இசைப்புலவர் நா. சண்முகரெத்தினம் நாடகம்: "குறள் தந்த வாழ்வு".

**20-5-62**

காலை 9-00

தலைவர்: திரு. க. செ. நடராசா.

**கவி அரங்கு**

அறநூல்—அல்வாயூர், திரு. மு. செல்லையா. பொருள் நூல் யாழ்ப்பாணம். இன்ப நூல்—திரு. சாலை. இளந்திரையன். அரசியல் நூல்— திரு. அம்பிகைபாகன். பொதுமறை திரு. தில்லைச்சிவன். பொய்யாமொழி—திரு. இ. முருகையன். இலக்கிய நூல்—மகாகவி நிறை நூல்—திரு. அ. ந. கந்தசாமி.

**20-5-52**

பி. ப. 4-00

தலைவர்: திரு. செ. தனபாலசிங்கம் (மாவட்ட நீதிபதி) இசைவிருந்து: திருவாட்டி சரசுவதி பாக்கியராசா.

**விரிவுரைகள்**

"அருளும் பொருளும்" வித்துவான் சி. ஆறுமுகம். "இலக்கிய உலகில் திருக்குறள்" பண்டிதர் ச. இராசையா "மனமுங் குறளும்" பண்டிதர் மா. மாணிக்கம். திருக்குறளும் வாழ்கையும்" வித்துவான் க. ந. வேலன். "வள்ளுவர் பாமணம்" சாலை. இளந்திரையன். "வள்ளுவரும் பல்லுயிரும்" பேராசிரியர் ஐயன் பெருமான் கோனர். நடனம்: நடன ஆசிரியர்: நல்லையாவின் மாணவிகள். நாடகம் சங்கிலியன்.

## மே 21ல் திட்டநகல் பற்றி விவாதம்

கொழும்பு, வியாழன்

பல்வேறு அமைச்சுக்களின் நிரந்தரக் காரியதரிசிகள் வருகிற 21-ம் தேதிகூடி அடுத்த நிதி ஆண்டிற்கான திட்டங்கள் பற்றி விவாதிப்பார்கள்.

மந்திரிகளுக்கு வழங்கப்படும் திட்டநகலின் அச்சடிக்கப்பட்ட பிரதிகள் ஜூன் 27-ம் தேதி தயாராய் இருக்கும். ஜூலை 11-ம் தேதிக்கிடையில் மந்திரிகளுக்கிடையே இதுசம்பந்தமான விவாதம் நடைபெறும். ஜூலை 24-ம் தேதி பார்லிமெண்டில் சமர்ப்பிக்கக் கூடிய நிலையில் இது தயாராய் இருக்கும். அடுத்தநாள் நிதிமந்திரி தமது பட்ஜட் பிரசங்கத்தை நிகழ்த்துவார்.

## சிவ தொண்டன் நிலையம்

யாழ்ப்பாணம், வியாழன்

சைவசித்தாந்தக் கொள்கையைப் பரப்புமுகமாக அடுத்த ஆண்டு மேல்நாட்டுக்கு ஒரு தூதுகோஷ்டியை அனுப்புவதென சிவதொண்டன் நிலையம் தீர்மானித்துள்ளது.

இதற்குப் பூர்வாங்கமாக ஒவ்வொரு புதன்கிழமையும், சனிக்கிழமையும் மாலை 5 மணி முதல் 7 மணிவரை சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் ஆகியன பற்றி ஒரு வருடம் நிலையத்தில் வகுப்புக்கள் நடத்தப்படும்.

திருஞானசம்பந்தரின் குருபூஜை தினமான மே 22-ம் தேதி மாலை 5 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

## "சேவையே கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியம்"

### மீன் விற்பனவு நிலைய திறப்புவிழாவில் பேச்சு

மட்டக்களப்பு, புதன்

"பண்டகசாலைகளையும், பலநோக்குச் சங்கங்களையும் நடத்துவதுதான் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கமல்ல. கூட்டுறவு இயக்கம் பொதுத்தொண்டையும், சேவையையும் இலட்சியமாகக் கொண்டது. மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான ஒவ்வொரு துறையிலும், நேர்மையுடன் செயலாற்றி, மக்களுக்கு உதவவேண்டும். அப்போதுதான் ஐக்கிய இயக்கத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இப்பகுதி மக்களின் அன்ருட உணவுக்குத் தேவையான மீனை நியாயமான விலையில் விநியோகம் செய்யவேண்டுமென்ற நோக்குடனேயே இப்புதிய மீன் விற்பனவு நிலையம் கூட்டுறவு இயக்கத்தின் ஆதரவில் திறக்கப்படுகிறது."

மட்டக்களப்பு மார்க்கெட் சதுக்கத்தில் கூட்டுறவு இயக்கத்தின் ஆதரவில் நடத்தப்படவிருக்கும் மீன் விற்பனவு நிலையத் திறப்பு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வி. கனகசபை பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாஜத்தின் ஆதரவில் நடத்தப்படவிருக்கும் இப்புதிய மீன் கடைத் திறப்பு விழாவுக்கு திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் தலைமை தாங்கினர். இப்பகுதி மக்களின் நீண்ட நாள் தேவைகளுள் ஒன்ருன, நியாய விலை மீன் விநியோகத்தை கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நடத்த முன்வந்ததற்காக, கூட்டுறவு ஆணையாளரைத் தான் பாராட்டுவதாக திரு. தேவநாயகம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களின் அரசாங்க அதிபர் திரு. டொறிக் அலுவிகாரை, சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டி, விற்பனவு நிலையத்தைத் திறந்து வைத்தார். திரு. சிவநேசராசாவும் பேசினர்.

## "இலங்கையில் முதலீடு செய்யும் நம்பிக்கை பெட்லிரோயம் கார்ப்பரேஷன் சட்டம் குலைத்துவிட்டது"

— 'கார்டியன்'

லண்டன், மே 17

இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் சட்டம் அந்நாட்டில் முதலீடு செய்வது சம்பந்தமான நம்பிக்கையைக் குலைத்துவிட்டது என "காடியன் பத்திரிகை" அபிப்பிராயம் கூறியிருக்கிறது.

"கல்டெக்ஸ்" மற்றும் வெளிநாட்டு எண்ணைக் கம்பெனிகள் வருந்துவதற்குக் காரணம் உண்டு. அவைகளின் சொத்துக்களை எடுத்து ஒரு அரசாங்க கார்ப்பரேஷன் நிறுவி பெட்ரோலிய உற்பத்திப் பொருட்களை விற்பதில் அக்கம்பெனிகளுடனேயே வர்த்தகப் போட்டி நடைபெறவிருக்கிறது.

நாட்டிலுள்ள கால்வாசி பெட்ரோல் நிலயங்கள் பெரும்பாலும் ரஷ்யாவிலிருந்து அரசாங்கத்தினல் இறக்கப்பட்ட எண்ணையை விற்கும் பெற்ரேல் நிலயங்களின் தேவைபற்றி கார்ப்பரேஷனே முடிவு செய்யும்.

இந்த வழியில் மலிவாகப் பெட்ரோலியப் பொருட்கள் கிடைக்கும் என அரசாங்கம் நம்புகிறது. அதனுடைய பொருட்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக் கிடைக்கும் எனவும் அது நம்புகிறது.

இவை இரண்டும் நாட்டு நலனுக்கு உகந்ததே. சிலசமயங்களில் வெளிநாட்டு எண்ணைக்கம்பெனிகளுடன் அரசாங்கம் கடுமையாக இருப்பது பலனளிப்பது உண்மையே. இந்தியா இதற்கு உதாரணமாய் இருக்கிறது. இலங்கைக்கு இது எவ்வளவு தூரம் நன்மை பயக்குமென்பது இனித்தான் தெரியும் என்று "காடியன்" கூறியுள்ளது.

"கல்டெக்ஸ்" பயமுறுத்துவது போல் எண்ணைக்கம்பெனிகள் தங்கள் வர்த்தகத்தை மூடிஞலும் இல்லாவிட்டாலும் அரசாங்க கார்ப்பரேஷனல் நன்மை அல்லது தீமை இருந்தாலும் இலங்கையில் முதலீடு செய்யும் நம்பிக்கையைக் குறைக்கவே இந்த நடவடிக்கை உதவி செய்திருக்கிறது" என்றும் அது கூறியுள்ளது.

## வவனியாவில் இ. தொ. கா. கூட்டம்

வவனியா, வியாழன்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வவனியா மாவட்ட வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. எஸ். எம். செல்லச்சாமி தலைமையில் வவனியா பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்றது கூட்டத்தில் இ. தொ. கா. மத்திய கமிட்டி செயலாளர் திரு. எஸ். செல்லையா தலவாக்கொல்லை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சேவுகப்பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. செல்லையா பேசுகையில் இ. தொ. கா. தொழிலாளிகளின் அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொடுக்கப்பாடுபடுவதாகக் கூறினர். பின் தேர்தல் நடைபெற்றது.

தலைவர் திரு. கோ. நடேசபிள்ளையும் உபதலைவர்கள் எஸ். சுப்பையா, திரு. இ. சுப்பையாதேவர், பொதுக் காரியதரிசி திரு. எம். ஏ. இஸ்மாயில். உபகாரியதரிசிகள்: திருவாளர்கள் பி. முனியாண்டி, எஸ். செவந்தி, கமிட்டி உறுப்பினராக 13 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பயிற்சிபெற்ற தோட்ட பாடசாலை ஆசிரியர்

### புறக்கணிக்கப்பட்டது பற்றி ஆசிரிய சங்கம் ஆலோசனை

நாவலப்பிட்டி, புதன்

மத்திய மாகாண தமிழாசிரிய சங்க காரியகமிட்டிக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. த. ச. சண்முகதாசன் தலைமையில் கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிரிய பயிற்சி பிரவேச பரீட்சையில் சித்தியெய்திய தோட்டப் பாடசாலை ஆசிரியர்களை வித்தியாபகுதி புறக்கணித்ததுபற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் இப்பிரச்னையில் தலையிட்டு தோட்ட ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சிபெற அனுமதிகோரி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்கு அனுமதி மறுக்கப்பட்டால் சட்டமூலம் "கோர்ட்" நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் அசைஸ் விசாரணை ஆரம்பம்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு அசைஸ் நீதிமன்ற விசாரணைகள் இம்மாதம் 14 ம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைகள் நடைபெறுகின்றன. அசைஸ் விசாரணை ஆரம்பிக்கப்படுவதன் முன், சம்பிரதாயப்படி நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா மட்டக்களப்பு மெதடிஸ்த தேவாலயத்தில் விசேஷ பிரார்த்தனையில் கலந்துகொண்டார். சுமார் பன்னிரண்டு வழக்குகள் இம்முறை அசைஸ் கோர்ட்டில் விசாரணை செய்யப்படவிருக்கின்றன.

## திரு. நாயரின் மறைவுக்கு அனுதாபம்

மட்டக்களப்பு, புதன்

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்செயலாளர் திரு.கே. ஜி. எஸ். நாயரின் மறைவு குறித்து, கம்யூனிஸ்ட் கட்சி மட்டக்களப்புக் கிளையின் சார்பிலும், இலங்கை தொழிற் சங்க சம்மேளன மட்டுநகர் கிளையின் சார்பிலும், திரு. கே. வி. கிருஷ்ணகுட்டி, அனுதாபத் தந்திச் செய்தியை அனுப்பினர்.

**புசல்லாவில்**

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை வளம்பெற சிறந்த முறையில் சேவை செய்தவரும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் காரியதரிசியுமான திரு. கே. ஜி. எஸ். நாயரின் திடீர் மரணச் செய்தியைக் கேட்டதும் இப்பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் அதிர்ச்சியடைந்து கண்ணீர்விட்டனர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று விளக்கினர் ராஷ்டிரபதி.

இரு சமயங்களுக்கும் ஒற்றுமை ஏற்படுத்த என்ன செய்யலாமென்று அவரை நேரில் கேட்டதற்கு "வாட் நான்சென்ஸ்! இரு சமயங்கள் மட்டுமல்ல. எல்லாச் சமயங்களிடையேயும் சமரசமேற்படுத்தி, ஒற்றுமையைப் பலப்படுத்த வேணடும்" என்றார் அவர். அந்த நாள் என்று வருமோ?

* * *

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றமறைப்பதுமுன் பணியே
அமரர்கள் செய்வதுமுன் பணியே
பெற்றுமுகந்தது கந்தனையே
பிரமபுரத்தை: உகந்தனையே

— திருஞானசம்பந்தர்

# கருவாட்டு விநியோகத்தில் காணப்பட்ட ஊழல்கள்

## கண் காணிக்க உணவு கமிஷனர் உத்தரவு

கொழும்பு, புதன்

நாட்டிலுள்ள சகல மொத்த சில்லறை வர்த்தகர்களும் கருவாட்டு கொள்முதல், விற்பனை ஆதியன சம்பந்தமாக சரியான கணக்கு வைத்திருக்கிறார்களா எனப்பார்க்குமாறு உணவுக்கமிஷனர் திரு. ஆர். எல். அர்னோல்டா உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளைக் கேட்டிருக்கிறார்.

உணவு. விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்கள் மாதம் ஒரு தடவை இவற்றைப் பரிசோதனை செய்யுமாறு உத்தரவிடப்பட்டிருக்கின்றனர்.

கூட்டுறவுக் கடைகளுக்கும் யூனியன்களுக்கும் விற்பனை சம்பந்தமாக பதவுப் புத்தகங்கள் வைக்குமாறு திரு. அர்னோல்டா உத்தரவிட்டிருக்கிறார்.

அதிகாரம்பெற்ற வர்த்தகர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் காணப்பட்ட ஒழுங்கீனங்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஒரு அரிசிக் கூபபனுக்கு மாதா மாதம் கொடுக்கப்படும் கருவாட்டை அரை றாத்தலிலிருந்து முக்கால் இறாத்தலாக உயர்த்த அரசாங்கத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் 60,000 அந்தர் கருவாட்டை கூட்டுறவுக்கடைகள், கூட்டுறவு யூனியன்கள், அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கு அளிக்கும் பொருட்டு உணவுக் கமிஷனருக்கும் கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்திற்குமிடையே இப்போது பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன.

## கடல்தொழில் கூட்டுறவுச் சங்கம்

### திருமலையில் ஆரம்பிக்க யோசனை

திருக்கோணமலை, வியாழன்

"திருக்கோணமலையில் கூட்டுறவு இயக்கம் மிகப் பரந்த அளவில் வளர்ச்சியடைந்துவருகின்றது. இதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். கடல் தொழில் வளர்ச்சிக்கு திருமலை ஓர் உகந்த இடம். ஆனால் அதன் வளர்ச்சிக்காக இதுகாலவரை ஓர் கூட்டுறவு மீன்பிடித் தொழில் இயக்கம் இல்லாதது அத் தொழிலின் வளர்ச்சிக்கு பாதகமாயிருக்கின்றது. திருமலைக் கூட்டுறவு அபிமானிகள் கடல் தொழில் வளர்ச்சிக்கென ஒரு கூட்டுறவு கடல் தொழில் சங்கமொன்றை நிறுவவேண்டும். இதுபோன்று கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை இப்பகுதியில் இருந்து நீக்குவது சாத்தியாகும்."

இவ்வாறு கூட்டுறவு ஆணையாளர் திரு. திலக் குணரத்தின திருமலை மாவட்ட கூட்டுறவு மகாநாட்டின்போது உரையாற்றுகையில் கூறினார்.

இம் மகாநாடு முகாந்திரம் முத்துக்குமாரு தலைமையில் நடைபெற்றது.

திருமலை கூட்டுறவு சமாஜத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: முகாந்திரம் இ. முத்துக்குமாரு. உப தலைவர்கள்: திரு. ரத்னபாலா, திரு. ஏ. எஸ். பெர்னாண்டோ. செயலாளர்: திரு. எம். கே. சிதம்பரப்பிள்ளை. பொருளாளர்: திரு. இ. சொர்க்கலிங்கம்.

செயற்குழுவினர்: முகாந்திரம் பாலசுப்பிரமணியம், திரு. மு கோ. சங்கரதாஸ், திரு எம். சண்முகம்பிள்ளை, திரு கே. பாலசுப்பிரமணியம், திரு. வ. மு. சின்னத்துரை.

## தோட்டத்தில் மாரியம்மன் திருவிழா

நாவலப்பிட்டி, புதன்

வட்டகொட தோட்டத்தில் மாரியம்மன் திருவிழா நடைபெற்றபோது சுமார் 500 தொழிலாளர்கள், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. அஸீஸுக்குமலர்மாலை அணிவித்து சுமார் ஒருமைல் தூரம் மேளதாளங்களுடன் ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். திரு. அஸீஸ் பேசும்போது; கடந்தகால காங்கிரஸ் கொள்கைகளை விட்டுவிட்டு புத்துணர்ச்சியுடன் இன்று ஜ. தொ. காங்கிரஸ் திகழ்கிறது என்று கூறினார்.

மாவட்டப் பிரதிநிதி திரு. என் செல்லையா பேசும்போது தொழிலாளர் இந்த நாட்டில் தொடர்ந்து துயரில்லாது துன்பவாழ்க்கையைத் துறந்து இன்ப வாழ்க்கையை அடைய வேண்டுமானால் அவர்கள் தொழிற் சங்கத்தில் ஒன்றுபட வேண்டும் என்றார்.

அடுத்து உப பிரதிநிதிகளான திரு.வீரையா, திரு. எம். தங்கவேல் ஆகியோர் பேசினர்.

## கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி

### மந்திரியை எம். பி. க்கள் பேட்டிகாண்பர்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை வர்த்தக கலைமன்றத்தின் சார்பில் மூன்று தமிழ் எம். பி. க்கள் மிக விரைவில் கல்விமந்திரியைப் பேட்டிகாணவிருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியைச் சிரேஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி அந்தஸ்துக்கு உயர்த்த வேண்டும். வர்த்தக ஆசிரியர் பயிற்சி ஆகிய விஷயங்கள் பற்றி இவர்கள் பேட்டிகாண்பரெனத் தெரிகிறது.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஆகியோருடன் இம் மன்றத்தாரில் சிலரும் பேட்டிகாணச்செல்வரெனத் தெரிகிறது.

## வடமராட்சியில் புதிய பாடசாலை

பருத்தித்துறை, புதன்

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மாமுனைக் கிராம வாசிகள் தங்கள் குழந்தைகளின் கல்வி வசதியை முன்னிட்டு புதிய பாடசாலை ஒன்றை நிறுவி உள்ளனர்.

இப்பாடசாலையை அரசாங்கத்திடம் ஒப்படைத்து இம் மாணவர்களது கல்விக்கு நிரந்தர வாய்ப்புக் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளை பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் மேற்கொண்டுள்ளார் என அறியப்படுகிறது.

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

### நாளை நடைபெறும்

உடுவில், புதன்

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆதரவில் இம் மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கும் மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை வடபகுதி பொலீஸ் அதிபர் திரு ஜே. வான்சன்டன் ஆரம்பித்து வைப்பாரென அறிவிக்கப்படுகிறது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்து விட்டன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் வரும் பெருந்தொகையான மாட்டுவண்டிகள் இப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கின்றன.

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் சமாசக் கொடியை ஏற்றி வைத்ததும் இப்போட்டி ஆரம்பமாகும். போட்டியின் இறுதியில் பரிசளிப்புவைபவம் நடைபெறும். சமாசத்தலைவர் அரசவாசல் முதலியார் திரு. சி. தியாகராசா இப்பரிசளிப்பு வைபவத்திற்கு தலைமை வகிப்பார். போட்டியில்வெற்றியீட்டியோருக்கான பரிசில்களைத் திருமதி ஜே. வான்சன்டன் வழங்குவார்.

## உடுவில் ஸ்டார் வெற்றி

உடுப்பிட்டி, புதன்

யாழ்ட்டன் வெற்றி கேடய கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிக் கட்டத்தில் உடுவில் ஸ்டார் கோஷ்டி சுன்னாகம் ரொக்கெட் கோஷ்டியை 2-1 ஆட்டங்களால் தோற்கடித்தது.

திரு. த. இரத்தினசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

திரு. ஜே. எஸ். செல்லப்பா உடுவில் கோஷ்டிக்கு வெற்றிக் கேடயத்தை வழங்கினர்.

# நூற்றுக்கணக்கான குடிசைகள் அழிந்தன

## காலிப்பகுதியில் கடலரிப்பு

காலி, வியாழன்

தெல்வத்தையிலிருந்து காலி வரையுள்ள வீதி நெடுகிலும் நூற்றுக்கணக்கான குடிசைகள் கடலினால் அரித்துச்செல்லப்பட்டன. காலி—கொழும்பு பிரதான வீதியில் தெல்வத்தையிலுள்ள ஒரு இடத்தில் பாதைக்குச் சேதமேற்பட்டிருப்பதால், மோட்டார் வாகனங்கள் செல்வது அபாயமாய் இருக்கிறது. சீனிகமவிலுள்ள சரித்திரப்பிரசித்தி பெற்ற தேவாலயம் கடலினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. காலியில் ஒரு பெட்ரோல் நிலையம் கடலினால் அரித்துச்செல்லப்பட்டது. காலி பெரியாஸ் பத்திரியும் அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதாய்த் தெரிகிறது.

## பஸ் தொழிலாளர் புதிய காரியாலயம்

யாழ்ப்பாணம், புதன்

வடமத்திய இ. போ. ச தொழிலாளர்சங்கத்தின் புதிய காரியாலயமொன்றை பருத்தித்துறை வீதியிலுள்ள 58-ம் இலக்கக் கட்டிடத்தில் இச்சங்கத்தின் தலைவரான நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி நாகநாதன் திறந்துவைத்தார். இத்திறப்பு விழாவில் அநேகர் கலந்து கொண்டனர்.

## காலியில் வெசாக் தினம்

காலி, வியாழன்

மின்சாரப் பற்றுக்குறையினால் காலியில் வெசாக் தீபாலங்காரம் அதிகமிருக்காது. நகரில் 5 பெரிய பந்தங்கள் மட்டுமே இருக்கும். ஆனால் சென்ற வருடத்தை விட கிராமங்களில் அதிக பந்தங்கள் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுக்குக் கிடைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் சட்ட சீலம் அனுஷ்டிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிணங்க ஆயிரக்கணக்கான பாடசாலைக் குழந்தைகள் சட்ட சீலம் அனுஷ்டிப்பர்.

## வாழைக் குலை வழக்கு

தெல்லிப்பழை, புதன்

குருணகலையைச் சேர்ந்த மாகிஸ் அப்புஹாமி என்பவர் சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ். இரத்தின சிங்கம் என்பவர் ஒப்படைத்த 2130 ரூபா பெறுமதியான வாழைக் குலைகளை நம்பிக்கை மோசடி செய்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்த முறைப்பாட்டு விசாரணையில் சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட வீரவாகு சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை இம்மாதம் 19-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

யாழ்ப்பாணத்தில் மிகப்பெரியது! இலங்கையில் ஒரு தீரமானது!

16,000 முட்டைகள் அடை வைக்கக் கூடிய கருவியிலிருந்து

**கோழிக் குஞ்சுகள்**

**60 சதம்**

உத்தரவாதமுள்ள உயர்தர
ஒரு நாள் வெள்ளை லெகோன் கோழிக் குஞ்சுகள்

70 சதம்
மற்றைய சாதிகள்

முன் கூட்டிய ஆடர்களை முற்பணம் 50 சதவீதம் கட்டி பதிவு செய்து கொள்ளலாம்.

**முட்டை அடைவைக்கும் விபரங்கள்**

முதல் நூறுக்கு 15 சத விகிதம்
இரண்டாம் நூறுக்கு 14 சத விகிதம்
மூன்றும் நூறுக்கு 13 சத விகிதம்

அடைவைப்பதற்கு ஆகக் குறைந்த தொகை 10 முட்டைகள்.
ஆடர்களை முன் கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிருங்கள்!

ஒரு நாள் குஞ்சுகள் விற்பனை செய்வதற்கு வட கிழக்கு மாகாணங்களில் ஏஜண்டுகள் தேவை.

**தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும்**

மானிப்பாய் வீதி, கூளாவடி, ஆனைக்கோட்டை.
( 4-ம் கட்டை, ஆனைக்கோட்டை உப-தபாற் கந்தோருக்கு அருகாமை )

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

வெள்ளி 18-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 "தக்பீர்", 7-15 'போதிமாதவன்' - இசைநிகழ்ச்சி, 7-45 முத்து லட்சுமி குழந்தைவேல் - பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-12 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை 6-45 வீணை.

இரவு 7-00 பௌத்தசஞ்சிகை, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேராசிரியர் துரைசாமிசாஸ்திரி - பேச்சு, 9-30 பாட்டு, 10-15 பக்திப்பாடல்கள்.

சனி 19-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரைஇசை 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கே. சிவப்பிள்ளை - பாட்டு.

இரவு 7-15 கண்டதும்கேட்டதும் (செய்திச்சுருள்), 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியக்கோஷ்டி, 9-30 லட்சுமி தேவி பாலக்கிருஷ்ணன் - பாட்டு, 10-15 நாட்டியஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

வெள்ளி 18-5-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 மாரியம்மன்கோயில் பி. டி. ராமஸ்வாமிபிள்ளை - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 குரலிசை, 1-50 வாத்திய இசை, 2-15 இசைக்கோவை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 காந்திகதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 மதுரைமணி ஐயர் - பாட்டு, 9-15 பலகணி, 9-30 மெல்லிசை மெட்டுகள், 9-45 இசைமாலை.

சனி 19-5-62

காலை 6-45 மங்களஇசை, 1 50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 கும்பகோணம் டி. கே. ஜனார்த்தனம் - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 கும்பகோணம் டி. கே. ஜனார்த்தம் — வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 நாடகம், 8-15 திரைப்படஇசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரதசங்கீத நிகழ்ச்சி.

## இலவசகுறள் வகுப்பு

கிரிலப்பனை, வியாழன்

செந்தமிழ் வளர்ச்சி மன்றம் கிரிலப்பனையில் உள்ள தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் நடத்தும் இலவச திருக்குறள் தமிழ் வகுப்புகளில் பெருந்தொகையான மாணவர்கள் சேர்ந்து படிக்கின்றனர். இந்த வகுப்புகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலையில் நடைபெறுகின்றன.

## கிழக்கு மாகாணடென்னிஸ் போட்டிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு அரசாங்க சேவை விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் டென்னிஸ் சுற்றுப் போட்டிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது கழகங்களுக்கிடையேயான சுற்றுப் போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இம்மாதம் 5-ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கழகங்களுக்கான போட்டிகள் 24-ம் திகதி முடிவடைகின்றன. தனிப்பட்டவர்களுக்கான போட்டிகள் இம்மாதம் 25, 26, 27-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

பரிசளிப்பு

சகல போட்டிகளிலும் வெற்றி பெறுபவர்களுக்கான வெள்ளிக்கிண்ணப் பரிசளிப்பு வைபவத்தை 27-ம் திகதி சிறப்பாக நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செயலாளர் திரு. ரி. ரி. கனகலிங்கம் செய்துள்ளார்.

கமிட்டி

திரு. ரி. ரி. கனகலிங்கம், திரு. பி. முருகேசு, திரு. ஏ. அரியநாயகம், திரு. ரி. காருண்யரத்தினம், திரு. கே. எம். ரி. சோமநாதர், டாக்டர் பி. என். டேவிட், டாக்டர் ஏ. துரைராசா, ஆகியோரைக் கொண்ட 'விசேட கமிட்டி டென்னிஸ் போட்டி ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

## திருமலையில் மந்திரி சில்வா

திருக்கோணமலை, புதன்

காணி மந்திரி திரு. சி. பி. டி' சில்வா நேற்றைய தினம் கந்தளாய், திருக்கோணமலை ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தார். கந்தளாய் சீனி ஆலைக்கும் விஜயம் செய்து ஆலையின் நிர்வாக டைரக்டர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் கல்மெட்டியா என்னுமிடத்தில் நடைபெற்ற ஓர் கூட்டத்தில் பேசுகையில் அரசாங்கம் பொருளாதாரப்பழுவால் கஷ்டப்படுகின்றதாகச் சில அரசியல்வாதிகள் கூறுவது தவறென்றும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்ய அரசினர் எவ்வளவு பணத்தையும் செலவளிக்கத் தயார் என்றும் கூறினர்.

## திவ்வியஜீவனசங்க வெள்ளி விழா

கண்டி, வியாழன்

திவ்யஜீவனசங்க வெள்ளி விழா, அந்தர்யோகம், ஆண்டு விழா ஆகியன இம்மாதம் இம்மாதம் 17, 18, 19, 20 ஆகிய தேதிகளில் கண்டி தென்னக்கும்புர சச்சிதானந்த தபோவனத்தில் நடைபெறுகிறது. இந்திய ஹைக்கமிஷன் இரண்டாவது காரியதரிசி திரு. டி. வி. இராம கிருஷ்ணராவ் உட்பட பலர் சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றனர்.

---

எதிர்வரும் மூதூர் உபதேர்தலில் போட்டியிடும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகரைத் தெரிவுசெய்யும்பொருட்டே இவர் திருமலை வந்தார் எனத் தெரிகிறது.



# நாட்டு முன்னேற்றத்திற்கு முப்படைச் சேவையின் அவசியம்

## செனட்சபையில் பிரதமர் விளக்கம்

கொழும்பு, புதன்

நாட்டின் முன்னேற்றத்துக்கு முப்படைகளையும் உபயோகிக்கலாமென்றும் இவ்விதம் உபயோகப்படுத்துவதால் முன்னேற்றத் திட்டங்கள் துரிதமாக செயல்பட இது உதவுமென்றும், மராமத்து பகுதிகளில் தொழில்நுட்ப வல்லுனர்களின் பற்ருக்குறையை இது ஓரளவு தீர்க்க வகைசெய்யுமெனவும் இன்று செனட்டில் இராணுவ சட்டதிருத்த மசோதா மீதான விவாததின் பேசிய பிரதமர் தெரிவித்தார்.

செனட்டர் விஜயசிங்காவின் தலைமையில் இன்று பிற்பகல் செனட் சபை கூடியபொழுது சாம் பி. ஸி. பெர்ணண்டோ பிறிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்வதற்காகவுள்ள சட்டத்தில் மாற்றம் உண்டுபண்ணுவதற்கான மசோதாவைச் சமர்ப்பித்தார்.

அதையடுத்துப் பிரதமர் இராணுவ சட்டதிருத்த மசோதாவின் 2 வது தடவையான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். கடற்படை, விமானப் படை ஆகியவற்றின் திருத்த மசோதாக்களும் இராணுவ திருத்த மசோதாவுடனேயே சேர்த்து விவாதத்துக் கெடுத்துக் கொள்ளப்பட வேண்டுமெனப் பிரதமர் விளக்கம் தெரிவித்தார். எல்லாம் ஒரு விடயத்தை யொட்டியே அமைந்திருப்பதால் எல்லாம் ஒரு முறையிலேயே விவாதிக்கப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டினர்.

இம் முப்படையின் சேவைகளை நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தப்பட வேண்டுமென்பதே அரசாங்கத்தின் கொள்கை என்றும் ஆனல் அவசர காலத்திலன்றி, இக்கொள்கையை நடைமுறைக்குக்கொண்டுவரத்தற்போதய இராணுவச் சட்டம் இடமளிக்க வில்லை யென்றும் பிரதமர் தெரிவித்தார். இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ள சட்டமாற்றங்கள் தங்கள் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்கு முதல் நடவடிக்கை என்றும், நாட்டின் முன்னேற்றத் திட்டங்களில் சேவை புரிய படை வீரர்கள் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்றும் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா கூறினர்.

படைகள் ஈடுபடக் கூடிய மிலிட்டரி அல்லாத வேலைகள் சிலவற்றைப் பற்றி பிரதம மந்திரி விளக்கிக் கூறினர்.

உதாரணமாக மராமத்து அமைச்சிற்கு தொழில் நுட்ப அதிகாரிகள் பொறியியல் நிபுணர்கள் போன்றவர்களில் பற்ருக்குறை ஏற்பட்டிருப்பதை இராணுவத்திலிருந்து இவ்வதிகாரிகளைக் கொடுத்துதவி செய்வதன் மூலம் நிவர்த்தி பண்ணலாமென்றும் பொது மக்களில் வேலையாட்கள் இல்லாத போதுபயிர் அறுவடை செய்வதற்கும் கரும்பு வெட்டுவதற்கும் இராணுவ வீரர்கள் உதவி செய்யலாமெனவும் பிரதமர் எடுத்துக் கூறினர்.

கடற்படையினர் துறைமுகத்தில் வழிகாட்டி வேலைகளில் உதவி புரியலாமெனவும், மீன்பிடிப் பகுதிகளைக் கண்காணிப்பதிலும், கள்ளக்குடியேற்றத்தைக் கூட இவர்கள் தடுக்கலாமெனவும் பிரதமர் தெரிவித்தார்.

இப்படி கள்ளக் கடத்தல்களைக் கடற்படை தடை செய்யலாமெனவும், இதே வகையில் விமானப்படையும் உதவி புரியலாமெனவும் விளக்கினர் திருமதி பண்டாரநாயக்கா.

## களனி வெலி கோஷ்டி தோல்வி

பதுளை, புதன்

பதுளை அரசாங்கத் திடலில் இலங்கை 'கிளிபோட்' கிண்ணத்துக்கான ரக்கர் சுற்றுப் போட்டியில் ஊவா கோஷ்டியும் களனி வெலி கோஷ்டியும் பங்குபற்றின. களனி வெலி கோஷ்டி தோல்வியடைந்தது.

## பொதுசேவையில் ஈடுபட வேண்டும்

### முஸ்லிம் பெண்கள் வேண்டுகோள்

பதுளை, புதன்

"இது ஒரு குக் கிராமமாக இருந்தபோதும் இங்குள்ள மக்கள் அனைவரும் ஒரே தலைவரின் தலைமையின்கீழ் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ்வது போற்றத்தகுந்து. இன்று இங்கே நடைபெறும் விழாவில் ஆண்கள் மாத்திரமன்றிப் பெண்களும் பெருமளவில் பங்குபற்றியமை எமது இஸ்லாமிய பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. இன்று எமது இனப் பெண்மகளிர் வீட்டில் அடங்கிக்கிடப்பதை விட்டுவிட்டு பொதுநலசேவையில் ஈடுபடுவது பெரிதும் விரும்பப்படுகின்றது. இப் பாடசாலை இன்று ஓர் ஆரம்பப் பாடசாலையாக இருக்கிறது. இதனை ஒரு மகாவித்தியாலயமாக மாற்றவேண்டியது தாய்மாரின் கரங்களிலேயே தங்கியிருக்கிறது." என்று கவிஞரும், எழுத்தாளருமான ஜனப் ஏ. அப்துல் காதர் லெவ்வை அலுகொல்ல, போகஹகும்புற அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை பெற்ருர் ஆசிரியர் சங்க விழாவில் பேசுகையில் கூறினர்.

பின்னர் மௌலவி என். பி. சுபைர் "தியாகத் திருநாள்" என்னும் பொருள்பற்றியும், மௌலவி ஏ. ஆர். எம். ஹாஸிம் "ஒற்றுமை" என்னும் தலைப்பிலும், ஜே. எஸ். இப்ருஹிம் ஆசிரியர் "பெற்ருேரும் குழந்தையும்" என்னும் பொருள்பற்றியும், ஏ. அமீர் முகைதீன் ஆசிரியர் "இன்றைய உலக நடவடிக்கை" பற்றியும், எம். சாஹுல் ஹமீட் "எமது கிராம முன்னேற்றம்" பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

# கொழும்பில் பெருமழை

## வெள்ளத்தினல் 400 பேர் வீடிழந்தனர்!

கொழும்பு, புதன்

நேற்றுக்காலை தொடக்கம் இன்று காலை வரை பெய்த மழை காரணமாக கொழும்பு நகரசபைப் பகுதிக்குள் பல மக்கள் தங்கள் வீடுகளை இழக்க நேரிட்டது. பல பட்டணங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்கள் தொடர்ந்து மழை பெய்கிறதெனக் கூறுகின்றன. பல முக்கிய வீதிகள் வெள்ளத்திலாழ்ந்துள்ளன கொழும்பு நகரத்தில் வனத்தமுல்ல பகுதி வெள்ளத்துக்குள்ளான காரணத்தால் 400 பேர் வீடிழந்தனர். வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டோர் தர்மக் கமிஷனரை உதவி கோரியுள்ளனர்.

மக்காதி தெருவில் மந்திரிகளுக்கென கட்டப்பட்டிருக்கும் வீட்டில் வசிக்கும் மந்திரிகள் தொடர்ந்து மழை பெய்ததினல் தங்களது வீட்டு முற்றமெல்லாம் வெள்ளம் வந்துவிட்டதென்றும் அதனல் நேற்றிரவு முழுவதும் தங்களுக்கு வெளியே செல்ல முடியாது போய்விட்டதென்றும் தெரிவித்துள்ளார்கள். அப்பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டதனல் இருட்டில் வசிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டதென்றும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

இந்நிலை தொடர்ந்தால் சுமார் 2,000 பேர் கஷ்டத்துக்குள்ளாகலாமென கொழும்பு நகரசபைக் கமிஷனர் பி. ஏ. ஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

களுத்துறைப் பகுதியில் 23 குடிசைகளை வெள்ளம் அடித்துச் சென்றது. நாட்டின் பல பகுதிகளில் பஸ் சேவையும் பெரு மழையினல் பாதிக்கப்பபட்டது. கொழும்புத் துறைமுகத்தில் வேலைகளெல்லாம் நேற்று ஸ்தம்பிதமாயின. நேற்றுப் பகலும் இரவும் ஒரு கப்பலிலும் பொருட்களை ஏற்றவோ இறக்கவோ இல்லை என துறைமுக அதிகாரிகள் அறிவித்தனர். துறைமுகத்திற்கு வெளியில் இன்னும் 6 கப்பல்கள் காத்து நிற்கின்றன.

இன்று காலை 8 மணியுடன் முடிந்த 24 மணித்தியாலத்துள் கொழும்பு ரத்மலானை அவதான நிலையத்தில் ஒன்பதரை அங்குல மழை பெய்திருக்கிறது. இது 1936-ம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு நாளில் பெய்த ஆகக்கூடியளவு மழை எனத் தெரிகிறது. நாடு முழுதும் கடும் மழை பெய்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வடபகுதியில் ஏற்பட்டுள்ள சுழல் காற்றின் காரணமாக இம்மழை பெய்கிறது. மத்துகம பட்டினம் போக்குவரத்து செய்ய முடியாதபடி வெள்ளத்தில் மூழ்கியிருந்தது,

## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ........................

கல்லூரி ........................

எனது பெயர் ........................

விலாசம் ........................

*இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

## கதிரேசன் நற்றமிழ் கழகம்

நாவலப்பிட்டி, வியாழன்

கதிரேசன் நற்றமிழ் கழகத்தின் கூட்டம் திரு. வே. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. அவர் கூறியதாவது:-

தோட்டங்களில் பழம் பெருமை வாய்ந்த கலைகளாகிய கும்மி, ஒயிலாட்டம், சிலம்படி முதலான கிராமிய கலைகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கவேண்டும். கல்லூரி மாணவர்கள் இக் கலைகளைப் பள்ளி மேடைகளில் அரங்கேற்றித் தோட்டங்கள் தோறும் பரவச்செய்ய வேண்டும். இந் நோக்கம் ஈடேற ஆசிரியர்களும் மாணவர்களும் ஒத்துழைக்கவேண்டும்.

கல்வியின் பயனல் நீங்கள் தோட்டமக்களின் வாழ்க்கை திருந்துவதற்கு கல்லூரி மாணவர்கள் செய்யவேண்டிய சேவைகள் நிறைய உள்ளன. முக்கியமாக நாடகம், கலா நிகழ்ச்சிகள் மூலமாக மக்கள் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தமுடியும்.

இக் கூட்டத்தில் கழகச் செயலாளர் செல்வன் வ. த. தர்மலிங்கன், செல்வன் அ. நடராசா ஆகியோரும் பேசினர்.

## நெற்காணி, தென்னங்காணி தேவை

கிளிநொச்சி, முரசுமோட்டை, கண்டாவளையில் நீர்ப்பாய்ச்சலுடைய நன்ருய் விளையும் பதினைந்து ஏக்கர் நெற்காணியும், எழுதுமட்டுவாள், பளையில் நன்ருய்க் காய்க்கும் இருபது ஏக்கர் தென்னந்தோட்டமும் தேவை.

கந்தையா,
நூதனசாலை,
யாழ்ப்பாணம்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) கிரசன்ட் (புத்தளம்)



ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்
எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா
பத்மினி பிரியதரிசனி
நடித்த

இரத்தினபுரி இளவரசி

டைரக்ஷன்: ராமண்ணு

5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 திரைகளில்
சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி,
நடித்த

பாலும் பழமும்

மனேஹரா (யாழ்ப்பாணம்) நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி
நடித்த
அனர்கலி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஈழநாடு

ஈழநாடு திருவள்ளுவர் திருநாள் அனுபந்தம் 18—5—62

# வள்ளுவர் கண்ட அரசு

—கா. ஆ. அருணசலம்—

[அண்ணமலை நகர்]

வையத்தார் உளளுவ வெல்லாம் ஓர்ந்து அளந்து, சிந்தனையைத் தூண்டும் சீரிய கருத்துக்களைக் கொண்ட ஒரு பொதுச்சட்ட நூலாக திருக்குறளை வழங்கினர், வள்ளுவனர். அது உலக மக்களுக்கு ஒரு முன்னறிவிப்பு நூல்; ஒரு பாற்கோடாத ஒரு புரட்சிகரமான நூல்; மனிதனை மனிதனக வாழவைக்க அன்றும், இன்றும், என்றும் வாழ்க்கைப் பாதையைவரையறுத்து விளக்கம் தரும் ஒளி விளக்கு. சமூக, அரசியல், பொருளாதாரக் கண்ணேட்டத்துடன் நோக்கும்போது வள்ளுவர் அரசியல் வாதியாக, சமுதாய சீர்திருத்தச் சிற்பியாகத் தோன்றுகின்றார்.

## குறளின் வைப்புமுறை

அறமும், பொருளும் இன்றி இன்பம் இனிது கிட்டாது. ஆதலால் அவற்றிற்குப் பின்னர் இன்பவியலை வைத்தார். அறவழி வந்த பொருளே நிலைத்து நிற்கும் தன்மை பெற்றது. அவ்வழி வந்த பொருளே நாட்டிற்கு இன்றியமையாதது. எனவே பொருட்பாலிலே அரசியலை வைத்தார். அறமில்லா வாழ்வு வாழ்வாகாதது போன்று பொருளில்லா அரசும் அரசல்ல. திங்கள்தோறும் மாறும் இன்றைய அரசியல் கருத்துக்கள் — சட்டங்கள் போல வள்ளுவர் அரசியல் கருத்துக்களைச் செய்திலர். ஆனல் அவர் மாளாக் கருத்துக்களில் சில காலத்திற்கேற்ற கருத்துக்களில் உருவெடுப்பதுண்டு.

## முடியரசா? குடியரசா?

அறம் வழுவா முடிமன்னர்களைக் காட்டுகின்றார் வள்ளுவர். அவ்வாறு காட்டியவர் மன்னவனுக்குரிய கடமைகளைக் காட்டினரேயன்றி உரிமைகள் இவையென இயம்பவில்லை. எல்லா அரசுக்கும் (முடியரசு, குடியரசு) கடமை பொதுவானது. ஆனல் உரிமை புறம்பானது. குறளில் வரும் அரசனை, ஜனதிபதி, சர்வாதிகாரி என்றவர்களை — இப்பொழுதுள்ள தலைவர்களை, ஆட்சித் தலைவன் எனக் கருதுவோமானல் பொருட்பால் போதிக்கும் அரசியல், உலக நாடுகள் அனைத்திற்கும் இன்றைய சூழ்நிலையிலும் பொருந்தி வருவதைக் காணலாம்.

## சார்புடைய அரசா?

"அந்தணர் நூற்கும்
அறத்திற்கும் ஆதியாம்
நின்றது மன்னவன்கோல்"

என்று நடுவுநிலைமையில் நிற்கும் அரசைச் சாற்றுகிறார் அவர். அரசானது சார்பற்ற அரசாகத் திகழவேண்டும் என்பதுதான் அவர் தெளிந்த கருத்து. எனவே அரசு வேறு, சமயச் சாதிப் பிணக்குகள் வேறு என்று பிரித்துக் காட்டுகிறார். அவர் காட்டும் அரசு சார்பற்ற அரசு.

## மன்னவனே இறைவன்

மன்னன் கடவுளின் பிரதிநிதி என்பது பண்டைய மக்களின் பொதுவான நம்பிக்கை. ஆங்கில நாட்டிலும், ஜப்பான் நாட்டிலும் இந்த நம்பிக்கை இருந்ததைச் சரித்திரம் விளம்புகின்றது. வள்ளுவர் காலத்தில் மனிதனைப்பற்றிய ஒரு முடிவு கூறுவதென்பது சாதாரண மக்களால் மனதாலும் நினைக்கமுடியாத காரியமாகும். வழிவழி வந்த பிறப்பின் காரணம்பற்றி மன்னனைக் கடவுளாகக் கருதிய மக்களைக் கண்டவர் வள்ளுவர்.

"முறைசெய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்"

எனச் செயலால் உயர்ந்த அரசனை இறைவனகக் காட்டினர் — புதுமைக் கருத்லைத வெளியிட்டார். மக்களிற் பிரித்து இறையை உயர்த்தும் நோக்குடனேயே மன்னனை இறை எனப் பிரித்துக்காட்டினர் என்பது தெளிவு. அப்படி இறைவனகை எண்ணப்படுவதற்கு மன்னனுக்கு வேண்டிய தகுதிகள், குணங்கள் எவை என்பதை உலகப்புலவன்சொல்லத்தவறவில்லை. மக்கள்காண விரும்பும்போதெல்லாம் எளிதில் காட்சியளிக்கவேண்டும்; "முறைசெய்து காப்பாற்று" பவனகவேண்டும்; "அறன் இழுக்காறு அல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம்" உடையவனக இருக்கவேண்டும்; அவனே கடவுளின் இடத்தில் வைத்தெண்ணத் தகுதியுடைய மன்னன் என்பதை விளக்குகிறார் வள்ளுவனர்.

## மன்னவன் கடமையும் பொறுப்பும்

"பண்புடையார் பட்டுண்டு
உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்ற குறள்மணி, உலகம் நிலைபெறுவது பண்புடையாளராலேயே என்று அறுதியிட்டு அறைகிறது. எனவே பண்பை வளர்க்கும் கல்வியை மக்களுக்குநல்கிப் பண்புடையாளராக்குவதே மன்னவனின் தலையாய கடமை. இதனை வலியுறுத்தவே 'இறைாட்சி'க்கு அடுத்தாற்போல் 'கல்வி'யைக் காட்டினர். மன்னனுக்குவேண்டுங்காலத்து வேண்டியாங்கு புத்திமதிகள் கூற அறிஞர் குழாம் வேண்டற்பாலது. வள்ளுவர் "சூழ்வார்" எனச் சூட்டும் அமைச்சர்களைக் கண்ணக்கொண்டு அவர்களின் ஆலோசனையைப் பெற மன்னன் கடமைப்பட்டவன். இயற்கையாலும் செயற்கையாலும் நாட்டில் ஏற்படும் தீங்குகள் யாவற்றிற்கும் அரசனே—அரசாங்கத்தலைவனே பொறுப்பு ஏற்கவேண்டும்.



வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு.

## வள்ளுவரின் அரசியல் புரட்சி

அறநெறி தவறிய அரசன் அல்லல் உற்று ஆற்றுது அழுத மக்களின் கண்ணீரால் வீழ்ந்து விடுவான் என, மக்கள் சக்தியின் வலிமைபற்றி எச்சரிக்கை செய்கின்றார் வள்ளுவர். அரசியலில்மக்களுக்கு உரிமையுண்டு; கடமையுண்டு; சட்டங்கள் செய்யும் உரிமையுண்டு என்பதை முதன்முதலில் வன்மையாகவற்புறுத்தியவர் வள்ளுவர் தான். எனவேதான் வள்ளுவர் ஓர் அரசியல் புரட்சிவாதி என்று கூறுவது.

## அரசாங்க உறுப்புக்கள்

அரசுக்குரிய அங்கங்கள் பல. அவற்றை 320 குறள்மணிகளால் விளக்குகின்றார் வள்ளுவர். அவற்றுள் முக்கியமானவை படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்பன. இவற்றில் ஒன்று குறையினும் அந்த அரசு வலிமையற்றதாகும். 'கூழ்' என்பது பொருளையும் நட்பு என்பது வெளிநாட்டுத் தொடர்பையும் குறிக்கின்றன. இன்றைய அரயசியில் தூதுவர்களைப் பரிமாறுவது ஒரு முக்கிய இடம்வகிக்கின்றது. நாட்டின் உறவு இன்றியமையாதது என்றார் அன்று. ஐ. நா. போன்ற ஒரு உறவு ஸ்தாபனம் எவ்வளவு அவசியமாகின்றது இன்று! வள்ளுவரின் அரசியல் ஞானம் தான் என்னே!

அமைச்சுஅரசிற்கு இன்றிமையாதது. அமைச்சின் ஆலோசனையில் நாட்டின் வளர்ச்சி தங்கியிருக்கின்றது. எனவே எப்படி அவர்களைத் தெரிய வேண்டும்? "இதனை இதனல் இவன் முடிக்கும் என்ளுய்ந்து அதனை அவன் கண்விடல்" என்று கூறுகிறார் வள்ளுவர். அவ்வாறு கொண்ட பின்பு "அதனை அதற்குரியவனகச் செயல்" என்று முழு உரிமையும் தெரிந்தெடுக்கப்பட்டவனுக்கே கொடுக்கின்றார். அப்படியானல் அவன் தனது முழுத்திறனையும்— ஆற்றலையும் வெளிப்படுத்த முடியும், என்பது வள்ளுவர் கூற்று.

## பாழ் செய்யும் சக்திகள்

மக்கள் உருவத்தால் பல கோடியினராயினும், உள்ளத்தால் ஒருவரே என்ற நிலைமை நாட்டில் ஏற்பட வேண்டும். இல்லையேல் நாடு மாண்புறுது. "பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லதுநாடு." சாதியால், சமயத்தால், கட்சி வேற்றுமையால் நாடு முன்னேற்றம் அடையாது என்று மனம் புழுங்குகிறார். அரசியலுக்குள திர்க்கட்சி வேண்டும் என்று இன்று கூறுவதையே வேறு பாணியில் அன்று கூறினர் வள்ளுவர். பசியும், பிணியும் உள்ள நாடு நல்ல நாடாகாது. வள்ளுவர் கண்ட பாழ் செய்யும் சக்திகள் அற்ற, அணி செய்யும் நாடு ஒன்று கூட இன்று இல்லை!

(III பக்கம் பார்க்க)

## 'பொலியுங்குறளின் உலகப் பொதுமை'

— வித்துவான் க. வேந்தனர் —

தெள்ளுதமிழின் செம்மை உலகில்
சிறந்து நின்று வீறவே
அள்ளுமமிழ்தின் அறமும் பொருளும்
இன்பமுடனே ஆய்ந்தவன்
வள்ளுவனும் வாழ்க வாழ்க
வாழ்கவென்று வாழ்த்துவோம்.
வையம் போற்றும் தெய்வப்புலவன்
வாழ்கவென்று வாழ்த்துவோம்

முன்னைப்பழமைக் காலந் தொட்டே
முதன்மை வாய்ந்த தமிழர்கள்
இன்னலின்றி வாழ்ந்த வாழ்வின்
ஏற்ற மெல்லாம் இரண்டடிச்
சின்னஞ்சிறிய பாக்களாலே
தெளித்துத் தேனைத் தந்தவன்
தெய்வப்புலவன் வள்ளுவன்சீர்
தேச மெல்லாம் பேசுவோம்.

பலபலவாய் உலகம் ஒன்று
பட்டிடாதப ழையநாள்
அலகிலின்ப உலக நூலை
ஆக்கி யருளும் வள்ளுவன்
புலமை நெஞ்சில் புகுந்த தமிழின்
புதுமை போற்றிப் பாடுவோம்
பொலியுங்குறளின் உலகப் பொதுமைப்
பொருளை நோக்கி ஆடுவோம்.

உலகமொன்று பட்ட இந்நாள்
உலக நூலாய் உலவிடும்
தலைமைசான்ற குறளைத் தமிழில்
தந்த தலைவன வள்ளுவன்
புலமையாலே உலகில் தமிழர்
புகழும் அறிவும் பூத்தன
புதியபுதிய மொழிகள் குறளின்
பொருளைப் போற்றிக் காத்தன.

ஆலமுண்டு தேவர் வாழ
அமுதை ஈந்தஅண் ணல்போல்
காலங்கடந்து வாழுங் குறளைக்
கன்னித் தமிழுக் கீந்தவன்
ஞாலம்பரவும் வள்ளுவப்பேர்
நம்பி என்றே பாடுவோம்
நல்லதமிழர் நாங்கள் என்றே
நயந்து கூத்துப் போடுவோம்.

பட்டு, பருத்திச் சேலை வகைகளுக்கும் றெடிமேட் உடைகளுக்கும்

டொலரும்ஸ் - TOLARAMS

ஒரு முறை விஜயஞ் செய்யுங்கள்!

46, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# மனித குலத்தின் தேசிய இலக்கியம்

—கிருஷ்ணு—

கல்தோன்றி மண்தோன்ருக் காலத்திற்கு முன்தோன்றி மூத்த குடியினரான தமிழர்கள் சிந்தனைத் துறையில் செழித்து வளர்ந்தவர்கள். தமிழர்கள், வாழ்க்கை முறையைப்பற்றி அதிகமாகச் சிந்தித்தவர்கள். உண்டு உடுத்து அனுபவித்து வாழ்ந்தால் போதும் என்று கருதாமல், முறையோடு வாழ வேண்டுமென்று கவலைப்பட்டவர்கள் தமிழர்கள். ஆகவேதான், சொல்லுக்கும் எழுத்துக்கும் மட்டும் இலக்கணம் காணுது மனிதன் வையத்து வாழ்வாங்கு வாழும் முறைகளையும் துறைகளையும் கொண்ட வாழ்க்கை இலக்கணத்தை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டார்கள்.

அகில உலக மொழியென்று சிறப்பித்துப் பேசப்படுகின்ற ஆங்கிலத்திலோ தேவமொழி என்று பாராட்டப்படும் வடமொழியிலோ வாழ்க்கைக்கு என்று இலக்கணம் இல்லை என அறிஞர்கள் முடிவு கட்டியிருக்கிருர்கள். தமிழில் வாழ்க்கைச் சட்டம் மலர்ந்த கால வரையறையையும் அளவிடமுடியாது. அது அவ்வளவு பழமையானது தமிழர்களிடத்தில் வழிவழியாக எழுந்து வளர்ந்த வையத்து வாழ்வாங்கு வாழ வேண்டுமென்ற உணர்வின் பயனுகவே தமிழில் அறநூல்கள் பல எழுந்தன.

மனிதன் மனிதனுகப் பிறந்தும் பறவையைப்போல் ஆகாயத்தில் பறக்கக் கற்றுக்கொண்டிருக்கிருன்; மீனைப்போல் கடலில் நீந்திச் செல்லவும் அறிந்திருக்கிருன்; விலங்கைப்போல் வண்டியிழுக்கவும் கற்றுக்கொண்டிருக்கிருன். ஆனால் மனிதன் மனிதனுகப் பிறந்தும் மனிதனைப்போல் நடந்துகொள்ளக் கற்றுக்கொள்ளவில்லையே! அதை உலகத்தார்க்கே கற்றுக் கொடுக்கும் தனிச் சிறப்பு வாய்ந்த நூலாகத் திகழ்கிறது திருக்குறள்.

திருக்குறள் வாழ்க்கையினின்றும் எழுந்த நூல். வாழ்க்கையை வளப்படுத்தும் வள நூல். திருக்குறளில் இராஜாராணிகளின் கற்பனை இல்லை; மணலில் கயிறு திரிக்கும் அதிசயம் இல்லை; சொப்பனத்தில் காணும் அற்புதங்கள் இல்லை. எல்லாம் வாழ்க்கை முறைகளாகும். அறநெறிகளென்றும் ஒழுக்க நெறிகளென்றும் விரித்துக் கூறுபவையெல்லாம், பெரும்பாலும் எல்லாக் காலங்களுக்கும், எல்லா நாடுகளுக்கும், எல்லா மொழியினருக்கும் ஒத்துவருவதில்லை. ஆனுல் திருக்குறள் காட்டும் அறநெறி காலத்தை, சமயங்களை, நாட்டின் எல்லைகளை, இனமொழி வர்க்க பேதங்களையெல்லாம் கட்டுப்படுத்தி விளங்குகிறது. அதாவது, திருக்குறள் அறம் எல்லா நாட்டு மக்களுக்கும், எல்லாக் காலங்களுக்கும் பொருந்துவதாக இருக்கிறது. ஆகவேதான், 'உலகப் பொது மறை' என வியந்து பேசப்படுகிறது.

மானிட சாதியின் வரலாறு அகன்றது; ஆழமானது; ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்துகொண்டே வருகிறது. இத்தகைய மானிட சாதியின் தேசிய நூலாக ஏற்றுக்கொள்ளக்கூடியது, உலகத்திலேயே திருக்குறள் ஒன்றுதான்.

உருவவாதம், யதார்த்த வாதம் என்று இன்றைய உலகில் இருவகை இலக்கியச் சித்தாந்தங்களைப்பற்றி சர்ச்சைகள் செய்யப்பட்டுவருகின்றன. இந்த மயக்கங்கள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி மனித வர்க்கத்தின் உயர்ந்த குறிக்கோளுக்கு இட்டுச் சென்றும், இலக்கிய இன்பத்தை ஒருங்கே தந்தும் பூரணத்துவம் பெற்ற உலக இலக்கியமாக நறுமணம் வீசுகிறது திருக்குறள்.

# வள்ளுவன் ஒரு சமாதான தூதுவன்

— க. க. —

அமெரிக்கா ரஷ்யாவுக்கு அஞ்சுகிறது; ரஷ்யா அமெரிக்காவுக்கு அஞ்சுகிறது. முடிவு, படை பலம்! தம் தலையிலும் இடி விழுமோ என்ற அச்சம் மற்ற நாடுகளுக்கு எழாமலா இருக்கும்?

முடிவு என்ன, எல்லோருமே எதிர்க்க ஆயுதம் தேடுகிருர்கள் படைபலம் பெருகுகிறது, உலகம் பதைபதைக்கத் தொடங்குகிறது. அமைதி குலைகிறது. அல்லல் பெருகிறது.

ஐ. நா. வின் முக்கியத்துவம் எழுதப்பட்ட சாசனங்கள் எல்லாமே பயனற்றுப் போகும் தறுவாயில் நிற்கிறது. எடுத்துக்கொண்ட முயற்சி எல்லாம் வீணுகிறது. வாழவேண்டிய மனிதகுலம் வாடுகிறது; நடுங்குகிறது. இந்த நேரத்தில் தான் என்ருே வள்ளுவன் கூறிய குறளொன்று எங்கிருந்தோ எச்சரிக்கைக் குரலாக கேட்கிறது.

'படைகொண்டார்
நெஞ்சம் போல் நன்றூக்
காது
ஒன்றன் உடல் சுவை
உண்டார் மனம்'

பயம் கொண்டு படைகொண்டோம் பலன் நம்நெஞ்சம் நல்லவற்றைபயனுள்ளவற்றை நினைக்க மறுக்கிறது. பிடிவாதம் பெருகிபேராபத்தை விலைக்குவாங்கக்கங்கணம் கட்டுகிறது.

நச்சுப்புகைகள் முகில்களிலெல்லாம் கலந்து சர்வநாசத்துக்கு அடிகோலவிருக்கிறதே, இந்தப் படை பலம், இதை வள்ளுவன் எப்படி அன்று உணர்ந்தான், அறிந்தான் என்பதை சிறிது சிந்திப்போமாகில் வள்ளுவன் ஒரு அறிஞன் மட்டுமல்ல, அமைதியை நிலைநாட்ட அறிவை உபயோகிக்கும் ஒரு சமாதான தூதுவன் என்போம்.

படை வந்ததும் பகை பெருகுகிறது. எதிர்ப்பு சக்தி கூடியதும் எதிர்க்கவேண்டுமென உள்ளம் தூண்டுகிறது. இதன் முடிவு போர். இதற்காகத்தான் எந்தக் காரணத்தைக்கொண்டும் படையைக் கையில் எடுத்துவிடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்வது போல் குறள் கூறுகிருன் வள்ளுவன்.

அவனது ஒரு குறள் போதும் உலகை சர்வநாசத்திலிருந்து காப்பாற்றி சமாதானத்தை வளர்க்க. படைபலத்தை அதிகரித்துக்கொண்டே படை குறைப்பு பற்றி இப்பொழுது பலமாகப் பேசப்படுகிறது. ஆபத்து பற்றிய விரிவுரைகள் பல நிகழ்த்தப்படுகின்றன ஒரு குறளில் என்ருே 'நன்றூக் காது' என்று விளக்கி வைத்து விட்டான் வள்ளுவன். முடிவு கெடுதி தொட்டு விடாதீர்கள் படையை என்று எச்சரிக்கை செய்யும் வள்ளுவன் ஒரு சமாதான தூதுவன்தானே!

## உன்னிடத்தும் அன்புவை

'பிறரிடத்து அன்புவை, பிறருக்குத் தீமை செய்யாதே, என்று மாத்திரம் வள்ளுவர் கூறவில்லை. 'உன்னிடத்தும் நீ அன்புவை: உனக்கும் நீ தீமை செய்யாதே; உன்னைக் காக்கும் முறையை அறிந்துகொள்; நோயின்றித் துன்பமின்றி வாழும் வகையைத் தெரிந்து கொள். உனக்கு நன்மை செய்கிருயா என்று ஆராய்ந்து பார்' என்றும் கூறுகிருர்.'

பண்டைத் தமிழ்மறைகள் மறைந்தபின் அவை கூறிய அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினையுந் தெள்ளில் தெரிக்கும் பொது மறை திருவள்ளுவர் நூலேயாம்.

—கா. சுப்பிரமணியபிள்ளை

# திருக்குறள் மொழிபெயர்ப்புக்கள்

( திரு. கா. பொ. இரத்தினம், தலைவர், தமிழ்மறைக்கழகம்)

| ஆண்டு | மொழி | மொழிபெயர்த்தவர் |
|---|---|---|
| 1730 | இலத்தீன் | — வீரமாமுனிவர் (கி. சே. பெசுக்கி) |
| 1856 | சேர்மன் | — கலாநிதி கிரெளல் |
| 1893 | சேர்மன் | — ஏ. என். காமேசு |
| 1852 | பிரெஞ்சு | — இ. ஏரியல் |
| 1867 | பிரெஞ்சு | — எம். லேமரேசு |
| 1924 | இந்தி(தமிழ்வேதம்) | — சேநானந்தராகத்து |
| 1945 | இந்தி | — கோவிந்தராய சைன |
| 1951 | இந்தி | — பேராசிரியர் பி.டி செயின் |
| 1958 | இந்தி | — சங்கரராசநாயுடு |
| 1922 | சமக்கிருதம் (அறத்துப்பால்) | — அப்பா தீட்சிதர் |
| 1945 | சமக்கிருகம் | — ஸ்ரீ ஏலாசாரிய |
| 1961 | சமக்கிருதம் | — திரு. எசு. எசு. சிறீராமதேசிகன் |
| 1600 | மலையாளம் | — இரவிவர்மா |
| 1915 | மலையாளம் | — கோவிந்தபிள்ளை |
| 1957 | மலையாளம் | — வெண்ணிக்குளம் கோவிந்தகுருப்பு |
| 1950 | மலையாளம் | — (இரத்தின உத்தாரகம்) சிற்பரமேசுவரன்பிள்ளை |
| 1887 | தெலுங்கு | — (உரை) (தீர்வர்க்ககதிரிகா) கனுப்பர்த்தி வேங்கடராம வைத்தியநாதநாதர் |
| 1947 | கன்னடம் | — எல். குண்டப்பா |
| | கன்னடம் | — நீதிமஞ்சரிநரசிம்மாச்சாரியா |
| 1948 | மராட்டி | — சாலே குருசி |
| 1939க்கு முன் | வங்காளம் | — நளினி மோகன்சன்யால் |
| 1960 | இரசியமொழி | — அலெக்சாந்தர்பியாகொசுக்கி |
| 1960-61 | சிங்களம் | — அரசாங்க ஆதரவில் மொழி பெயர்ப்பு நடைபெறுகிறது |
| 1961 | சிங்களம் | — சி. மிசிகாமி |

இந்திய அரசின் சாகித்திய மண்டலம் இந்திய பிரதேச மொழிகள் யாவற்றிலும் மொழி பெயர்க்க ஒழுங்கு செய்துள்ளது. பர்மாத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் பர்மிய மொழியில் மொழி பெயர்ப்பிக்க முயல்வதாக அறிவித்துள்ளர். பீச்சித்தீவின் கைவித்திய மொழியிலும் மொழிபெயர்க்க அந்நாட்டுத் தமிழன்பர்கள் முயல்கின்றனர்.

## ஆங்கில மொழிபெயர்ப்புக்கள்

பலராற் செய்யப்பட்டுள்ள. சிலருடைய பெயர்களே இங்கு தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1812 — எல். டபிள்யூ. எல்லிசு | 1840 — டபிள்யூ.எச்சு. இடுனு |
| 1872 — சி. ஈ. கவர் | 1885 — ஈ. யே றொபின்சன் |
| 1886 — சி. யூ. போப்பு | 1885 — யே. இலாசரசு |
| 1932 — எச்சு. ஏ. பொப்ஸ் | 1920 — வ. வே. சு. ஐயர் |

இராமச்சந்திர தீட்சிதர், இராசகோபாலாச்சாரியார், பூரணலிங்கம்பிள்ளை, சக்கரவர்த்தி, சபாரத்தின முதலியார், தங்கசாமி, இராசகோபால ஐயங்கார் முதலானோரும் மொழி பெயர்த்துளர்.

# தமிழ் மறை

— கபிலர் —

ஊசியினில் மருந்தேற்றி உடல்நோய் தீர்ப்பர்;
உள்ளத்து நோய்தீர்க்க ஒன்றுங்காணுர்!
தேசிழந்து சோர்வடைந்து தேய்ந்த உள்ளம்
திட்பமுறப் புகுத்திடற்குத் திறமை மிக்க
மாசிலையாப் பெருமருந்து மனத்துக்கென்றே
மாண்புடைய வள்ளுவனுர் மதித்துத் தந்த,
ஆசிலையாத் தமிழ்மறையே; அவனி காணு
அருமருந்தாம் இதன் திறனை அளப்போர் யாரே?

இரவினிலே சூழ்ந்திட்ட இருளைப் போக்க
இலங்குகின்ற மின் விளக்கிற்கெல்லையுண்டோ?
கரவினுடன் பொருமையுங் காழ்ப்புங் கொண்டு,
கயமையாற் பிணிப்புண்டு, கலங்கும் உள்ளம்
விரவிடும்பேர் இருள் தன்னை விரட்டவல்ல
வெளிச்சத்தைப் பரப்புமொரு விளக்கு நல்லோர்
பரவிடுஞ் செந் தமிழ்மறையே; படித்துப் பார்த்துப்
பகருங்கள் இதற்குநிகா பாரில் உண்டோ?

அறந்தழைக்க அரசிருத்தி, அழகு செய்ய
அன்பென்னும் அணிபூட்டி, அருளை நாடிச்
சிறந்த மணிமுடியாகச் சிரத்திற் சூட்டிச்,
செல்வம் நற் கல்வியுடன் செழித்து ஓங்க,
மறந்தவிர்த்து நல்வாழ்வு மக்கள் வாழ,
மண்ணுலகை விண்ணுலகாய் மாற்றிக் காட்டிப்
பிறந்தபயன் இங்குபெறப் பிறர் சொல்லாத
பெருநெறியைத் தமிழ்மறைதான் பேசும் அன்றே!


மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்
லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,
த. பெ, 11, கொழும்பு

எதிர்பாருங்கள் !

டில்க்கா - கல்யாணி

பரிசுத் திட்டம்

ரூபா 1500க்கு மேற்பட்ட பரிசுகள்

வெகு விரைவில் விபரங்களை எதிர்பாருங்கள் !

# உயர்ந்த ஞான நூல்

—அல்பேர்ட் சுவைட்சர்—

தத்துவம், சமயம், சங்கீதம் எனும் மூத்துறையிலும் டாக்டர் பட்டமும் பலநோபல் பரிசுகளும் பெற்ற பேரறிஞரான அல்பேர்ட் சுவைட்சர் எழுதிய 'இந்திய சிந்தனை' என்ற நூலில், திருக்குறளைப் பற்றிக் குறிப்பிட்ட கருத்துகளின் தொகுப்பு இது. இவர் ஜெர்மன் தேசத்தவர்.

பகவத்கீதையில்கர்மத்தின் முதன்மையைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. எனினும் பகவத் கீதையின் கூற்று ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. பற்றற்ற விருப்பு, வெறுப்பற்ற கர்மத்தைச் செய்வதால் பரதத்துவத்தை அடையலாம் என்பதே பகவத்கீதையின் கொள்கை. கடவுளிடத்திலே மனிதன் அன்பு செலுத்தவேண்டுமென்பது பகவத்கீதையின் குறிக்கோள். மனிதன் மனிதனுக்குக்காட்டும் அன்பினல் கடவுளை அடையலாம் என்ற கருத்துப் பகவத்கீதையில் இல்லை. அன்புச் சமூகத் தொண்டாக மாறவேண்டுமென்ற கருத்து திருக்குறளிலேதான் வற்புறுத்தப்படுகிறது.

மனுதர்ம சாஸ்திரத்தில்கூறப்பட்டிருப்பதுபோலக் குறளிலும் ஒழுக்கத்தினுல் மனிதனுக்குப் பயன்கிடைக்கிறது என்ற கருத்துக் கூறப்படுகிறது. பிறவிக் கடலிலிருந்து விடுபடுதற்கும் அடுத்த பிறப்பில் உயர்ந்த நிலையை அடைதற்கும் முயலுதல்வேண்டும் என்று குறளுங் கூறுகிறது. இதனேடு பகவத்கீதையிலும் ஒருபடி மேலே செல்லுகிறதுகுறள். கைம்மாறு கிடைத்தாலும் கிடைக்காவிடிலும் நல்ல செயலைச் செய்வதால் மனத்துக்குஇன்பம்உண்டாகிறது. ஆகையால் நல்ல செயல்களைச் செய்யவேண்டும் என்னும் உண்மையைக் குறள் கூறுகிறது. "மக்கள் கர்மத்தில் ஈடுபடவேண்டியிருக்கிறது. இதுதான் இயற்கை நியதி" என்று சோர்வுடன்கூறுகிறது. பகவத்கீதை. இது வரண்ட கொள்கை. இதற்கு மாருக குறள் 'செயல்களிஞற் பிறருக்குத் தொண்டாற்றி நன்மை செய்யமுடியும். ஆகையாற்செயலில் ஈடுபடு என்று முழங்குகிறது.

பகவத்கீதை ஒவ்வொருவருடைய சாதிக்குமுரிய கடமைகள்தான்கடமைஎன்றுபோதிக்கிறது. குறளோ எதுநன்மையோ அதைச் செய்வதுதான் கடமை என்றுகூறுகிறது. செயலில் ஈடுபடுவதால் மக்களுக்கு இன்பம் உண்டாகிறது என்ற கருத்தை இந்திய இலக்கியத்தில் காணல் முடியாது. இக்கருத்தை வள்ளுவர் பெருமான் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கின்றுர்.

உலகம் ஒரு மாயை என்ற கொள்கையில் உள்ள நல்ல அம்சங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு அதனேடு அன்பை அடித்தளமாகக் கொண்ட தொண்டு அவசியம் என்பதையும் வள்ளுவர் வற்புறுத்துகின்றுர். ஒழுக்கமே மக்களுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதை மிகுந்த பணிவுடன் அவர் கூறியிருக்கின்றுர். ஒவ்வொருவரும் தமக்குத்தாமே செய்யவேண்டியகடமையென்ன என்பனவற்றைப் பற்றியும் அழகாக வள்ளுவர் பேசுகிறுர். உலக இலக்கியத்திலே இவ்வளவு சிறந்துயர்ந்த ஞானம் வேறெரு நூலிலும் கூறப்படவில்லை எனலாம்.

கிறிஸ்து பிறந்த காலத்திலேயே 'உலகம் உண்மையானது தான்; மாயை அன்று' என்ற கொள்கை இந்தியாவிற் பரவியிருந்தது. பகவத்கீதை பௌத்த நூல்கள் முதலியவற்றில் இக்கொள்கை இல்லையெனினும் குறளாசிரியர் வாயிலாக இக்கொள்கை எங்கும் மெள்ள மெள்ளப்பரவி பின்னர் சமயத் தலைவர்களினுல் வளர்க்கப்பட்டுள்ளது.

---

## உயர் சிறப்பு

"தமிழ் நாட்டிலே தோன்றிய திருவள்ளுவர் எந்நாட்டவர்க்கும் எந்நாளும் பயன்படும் வகையில் தமிழ்மறையாகிய திருக்குறளை எழுதிப் போந்தனர். இம்மறை ஏனைய மறைகளுள் அடங்குவதன்றித் தனி நின்றுயர்ந்த சிறப்புப் பெற்று விளங்குகின்றது."

-பேராசியர் ரா.பீ. சேதுப்பிள்ளை

---

"முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்த வள்ளுவரே வறுமையில் கொடுமையைக் கண்டு அஞ்சினல் குடியாட்சியில், வாக்குரிமை பெற்று வாழும் நாம், வறுமைக்கு அஞ்சவேண்டாமா? வறுமை ஒழிந்தாலன்றி அரசியலிலும், பொது வாழ்விலும் ஈடுபடும் மக்களிடத்தில் தகுதி பிறக்க மாட்டாது. ஆகையால் வறுமையை அரசும் மக்களும் எவ்வாருயினும் ஒழித்து விடவேண்டும். உப்புக்கும் சோற்றுக்கும் மக்கள் வாழாமல் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ வகைசெய்யவேண்டும்."

## வள்ளுவர் கண்ட...

(Iம் பக்கத் தொடர்ச்சி)

### திட்டம் தீட்டுதல்

அரசுக்குத் திட்டம் இன்றியமையாதது. எனவே 'இறைமாட்சி'யிலே முதன்மை கொடுத்து,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" என்று திட்டம் தீட்டும் வகைகளை முன்னதாகக் கூறிவிடுகிறுர். இங்கே தெய்வப் புலவரின் அரசியல் மேதாவிலாசம் ஒளி வீசுகிறது.

### அடிப்படை ஆதாரம்

மக்கள் உயர்வு சமுதாய உயர்வு ஆகும். சமுதாய உயர்வு நாட்டின் உயர்வு ஆகும். வாழ்க்கை வளம்பெற அறிவு வளர வேண்டும். அதன் ஆக்கமே இன்பப் பெருக்காகும். எனவே எல்லாவற்றிற்கும் அடிப்படை அறிவு. எனவேதான் "அறிவுடையார் எல்லா முடையார்" என்ருர். ஒவ்வொருவனும் சிந்திக்க வேண்டும்; சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்; அதன் பின்பே முடிவு கட்ட வேண்டும் என்று வற்புறுத்துகிருர். (355,423 குறள்கள்.) உறுதியோடும், ஊக்கத்தோடும் செயல் செய்யும் மக்களைப் பெற்ற நாடே தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நிற்க முடியும் என்கிருர்.

இதுகாறும் வள்ளுவர் கூறியன இருப்பின் ஏனைய நலங்கள் தன்னுலே வரும் என்பதும், தீய சக்திகள் தானே அழியும் என்பதும் பெறப்படும். இயற்கையாக மரணம் அடைவதையே வள்ளுவர்விரும்புகிருர். கொலையை வெறுக்கிருர். புலாலுணவைத் தள்ளுகிருர். சிறைக் கூடங்களைக் கல்விக் கூடங்கள் ஆக்கச் சொல்லுகிருர். உடல் உழைப்பை, நீண்ட நாள் வாழ்வை விரும்புகிருர். பரந்த நோக்கினராக வாழச் சொல்லுகிருர்.

'எல்லாரும் எல்லாப் பெருஞ்
செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடை
யார்களும் இல்லை மாதோ'

என்பதையே வள்ளுவர் வரவேற்கின்ருர்.

(தமிழ்மறைக் கழகம் நடாத்திய திருக்குறள் கட்டுரைப் போட்டியில் பரிசில் பெற்ற கட்டுரையின் சுருக்கம்.)

## திருக்குறளின் பெருமை

திருக்குறள் உயிர்களின் உணவு; உள்ளத்தின் உணர்வு; உணர்ச்சியின் ஊற்று; அறிவின் கருவூலம் (களஞ்சியம்); அருளின் தெளிவு; அறத்தின் பிறப்பிடம்; ஆற்றலின் தோற்றம்இன்பத்தின் இருக்கை; ஊக்கத்தின் சேர்க்கை; செந்நெறிச் செறிவிடம்; ஒழுக்கத்தின் உறைவிடம்; வாழ்க்கையின் விளக்கு; உண்மையின் உறையுள்; பண்பின் பயிலிடம்; உலகின் ஒருநெறி; மக்களின் ஆக்கம்; மானிடர் வாழ்வு; மானத்தின் வரம்பு;பிறர் நலப் பிறப்பிடம்; துறவின் நிறைவு; பொருளின் புதையல்; பொறையின் பொற்பு; வீரத்தின் நேர்மை; மறத்தின் மாண்பு; காதலின் கனிவு; ஈகையின் இன்பம்; கடமையின் காட்சி; ஊழின் பகையாள்; கூற்றுக்கு மாற்ருன்; தமிழன் அமிழ்தம்; தென்மொழிச்செல்வம்; திராவிடர் தோட்டம்; தமிழர்கள் சட்டம்; சிறப்பின் சிகரம்; கலைகளின் நிலைக்களன்; சாகாக் கல்வியின் அடிப்படை; மரணமிலாப் பெருவாழ்வின் வழி.

—ஆசிரியர் இறையனுர்

---

திருக்குறள் தமிழ் மொழியிற் பிறந்த ஒரு பெரும் பொது மறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன் கண் மிளர்கின்றன. இப்பெரிய பொதுமறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

—திரு. வி. க.

## பயன் பெறுவோமே

"வட்டூர் கானம்"

குறள் கொடுத்த வள்ளுவன்—புதுக்
கவிதை செய்த வள்ளுவன்
அறம் வகுத்த வள்ளுவன்—அன்பில்
அரசு கண்ட வள்ளுவன்

பொருள் புகன்ற வள்ளுவன்—பெறும்
பாதை பகர்ந்த வள்ளுவன்
இருள் பிரித்த வள்ளுவன்—இறையிருக்கும்
இடம் நவின்ற வள்ளுவன்

பண்பு சொன்ன வள்ளுவன்—அதன்
பயனைச் சொன்ன வள்ளுவன்
இன்பம் இயம்பும் வள்ளுவன்—வாழ்வை
இனிக்க வைக்கும் வள்ளுவன்

எல்லாம் சொன்ன வள்ளுவன்—உலகை
எழுத்தில் அளந்த வள்ளுவன்
சொல்லாப் பொருள் எங்குண்டு—அவன்
சொல்லும் திறமை யார்க்குண்டு?

உலகை உயர்த்தும் பொதுமறை—எங்கும்
உயர்வு பெற்ற பொதுமறை
பலரும் போற்றும் தமிழ்மறை—அதை
படித்துப் பயன் பெறுவோமே!

---

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர் நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தமராகி ஒழுகுவமே.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை




# தமிழ்மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடுகள்

திருக்குறளின் தொடர்பால் உலகத்தின் பல நாடுகளில் வாழும் தமிழர்களிடையே ஒற்றுமையையும் ஒரு பிணைப்பையும் உண்டாக்குதற்குத் தமிழ் மறைக் கழகம் சென்ற பத்து ஆண்டுகளாக முயன்று வருகிறது. உலகமெங்கும் உள்ள தமிழ் மக்களை வைகாசி அனுட்டத்தில் வள்ளுவர் திருநாளைக் கொண்டாடுமாறு ஊக்கிவருகிறது. இப்பணியுடன் தமிழ் மறைத் தேர்வு, தமிழ்மறைக் கட்டுரைப் போட்டி என்பவற்றையும் அது நடத்துகிறது.

திருக்குறளின் அருமை பெருமைகளை இலங்கை மக்கள் யாவரும் நன்கு உணர்த்துதற்காக ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளின் போது திருக்குறள் மாநாட்டையும் அது வெவ்வேறு ஊரில் நடத்துகிறது.

திருக்கோணமலையில் அதன் முதலாவது திருக்குறள் மாநாடு 1953 மே 28, 29, 30 ஆம் திகதிகளில் திருக்கோணமலைத் திருவள்ளுவர் கழக ஆதரவில் நடைபெற்றது. இரண்டாவது மாநாடு நாவலப்பிட்டியில் 1954 மே 16, 17, 18 ஆம் நாள்களில் நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்க, ஆதரவில் நிகழ்ந்தது. மூன்றுவதுமாநாடு அனுராதபுரத்தில் 1955 ஜூன் 4, 5 ஆம் தேதிகளில் அனுராதபுரத் தமிழ்க் கழக ஆரதவில் நடைபெற்றது.

நான்காவது திருக்குறள் மாநாடு 1956 மே 24, 25, 26 ஆம் நாள்களில் யாழ்ப்பாணத்தில் வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்க ஆதரவில் நடைபெற்றது. ஐந்தாவது மாநாடு கொழும்பில் 1957 ஜூன் 8, 9, 10, 11 ஆம் நாள்களில் கொழும்பிலுள்ள பதினன்கு சங்கங்களின் ஆதரவில் நடைபெற்றது. (ஆருவது மாநாடு 1958 இல் உண்டான வகுப்புக் கலவரத்தால் நடைபெறவில்லை) ஏழாவது மாநாடு சுளிபுரத்தில் 1959 இல் மே, 22, 23, 24-ம் திகதிகளில் விக்ரோறியாக்கல்லூரி மாணவர் மன்ற ஆதரவில் நிகழ்ந்தது. எட்டாவது மாநாடு மாத்தளையில் 1960 ஜூன் 4, 5 ஆம் தேதிகளில் நிகழ்ந்தது. (ஒன்பதாவது மாகாடு அவசரகாலப் பிரகடனத்தால் தடைப்பட்டது) இவ்வாண்டு வேலணையில் மே 18, 19, 20 இல் பத்தாவது மாநாடு நடைபெறுகிறது. முன்னர் நடந்த மாநாடுகளில் இலங்கையிலுள்ள தமிழ்ப் பேரறிஞர்கள் யாவரும் கலந்து உரை விருந்தளித்தனர். சிறந்த இசைக்கலைஞர்கள் இசைவிருந்தளித்துளர். இம்மாநாடுகளில் தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் பலர் கலந்து சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளனர்.

## அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு-1961

### பரிசில் பெற்றோர்

சென்ற ஆண்டிலே தமிழ்மறைக்கழகம் நடத்திய தமிழ் மறைத் தேர்தலிலே பரிசில் பெற்றோர் விபரங்களை கீழேகாண்க. முதற்பரிசிலுக்குத் தங்கப்பதக்கமும் ஏனையவற்றுக்கு வெள்ளிப் பதக்கங்களும் தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மாநாட்டில் 18-5-62-ல் வழங்கப்படும். (பெயர்களுக்குப் பின்னுள்ள இடங்கள் தேர்வுக்குத் தோன்றிய மையங்களாகும்)

**மேற்பிரிவு**

முதலாம் பரிசில் — திரு. மா. இசக்கி, மாத்தளை.
இரண்டாம் பரிசில் — திரு. ஆ. தாமோதரம் பிள்ளை, யாழ்ப்பாணம்.
மூன்றும் பரிசில் — திரு. ஆ. தருமலிங்கம், கொழும்பு.

**மத்திய பிரிவு**

முதலாம் பரிசில் — பொ. பொன்னம்மா, முள்ளியவளை.
இரண்டாம் பரிசில் — நா. பாலசுப்பிரமணியஐயர், முள்ளியவளை.
மூன்றும் பரிசில் — இ. புட்பராணி, சுளிபுரம்.
நாலாம் பரிசில் — பொ. சரோசினி தேவி, நீர்வேலி.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் பரிசில் — ந. சி.கந்தராசா, காரைநகர்.
இரண்டாவது பரிசில் — சு. கமலநாயகி, யாழ்ப்பாணம்.
மூன்றும் பரிசில் — சு. ரங்கநாயகி, யாழ்ப்பாணம்.
நாலாம் பரிசில் — சு. இலட்சுமி, பன்வில.

**தொடக்கப்பிரிவு**

முதலாம் பரிசில் — ஆ. கௌரிதேவி, சாவகச்சேரி.
இரண்டாம் பரிசில் — சி. ஞானசம்பந்தன், காரைநகர்.
மூன்றும் பரிசில் — த. நளினு, கீரிமலை
நாலாம் பரிசில் — த. ஸ்கந்தராசா, கீரிமலை.

**மிகக் குறைந்த வயதினருக்குரிய பரிசில்**

க. பவானி, தெல்லிப்பழை - பிறந்த தேதி 3-5-53.


உயர்ந்த ரக பிடவைகளுக்கு

சாந்தி எம்போரியம்

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்



# அனைவருக்கும் ஓர் முக்கிய வேண்டுகோள்



தலைமை ஸ்தாபனம் - யாழ்ப்பாணம்

உங்களுக்கு கவலை இல்லாத வாழ்வு வேண்டுமா? அதற்கு உங்களது உழைப்பில் சிறிதாக இருந்தாலும் சரி, ஓர் மிகச் சிறிய பாகத்தைச் சேமித்து ஓர் கணக்கில் 'றிசேவ்'பண்ணி வைக்கவேண்டும். அது முடியாது விட்டாலும் சேமிப்பு, முயற்சி, சிக்கனம் - வாழ்க்கையின் வெற்றி வழி என்பதை உணரவேண்டும்.



கிளை ஸ்தாபனம் - நாவற்குழி

சேமிப்புக்கு கணக்கில் எவ்வளவு தொகையும் போடலாம், எடுக்கலாம். அவைகள் எல்லாம் பாஸ் புத்தகத்தில் பதியப்படும். மாதம் மாதம் வட்டி கொடுக்கப்படும். அல்லது பாஸ் புத்தகத்தில் கூட்டப்படும்.

## 6 வீத வட்டி உண்டு.

தொடர்ந்து கட்டும் கணக்கு (Recurring Deposit Account) மாதம் 10 ரூபாவீதம் 78 மாதம் கட்டினல் 1000 ரூபாவாக கொடுக்கப்படும்:

அதே போல் 25×78=2500, 50×78=5000, 100+78=10000, 10+240=4000

## சிலோன் றிசேவ் லிட்., சேமிப்பு வங்கி

பஸ் நிலையத்திற்கு வடக்கே, (1959-ம் ஆண்டு ஸ்தாபிதம்) யாழ்ப்பாணம்.